759



# விமோசனம்

ஒரு மாதப் பத்திரிகை

| தொகுதி | ஆசிரியர்: | பகுதி |
| --- | --- | --- |
| 1 | சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரி | 2 |

சுக்ல-வரு

புரட்டாசி

புதுப்பாளையம்
**காந்தி ஆசிரமம்,**
திருச்செங்கோடு.

வருஷ சந்தா தபால்கூலி உள்பட ரூபாய் ஒன்று.
தனிப்பிரதி அணா ஒன்று, தபால்கூலி வேறு.

# பொருளடக்கம்.


| | |
|---|---|
| ஈசா அல்ல, யமன் !—படம் ... ... | 41 |
| புட்டிச் சரக்கு ... ... | 42 |
| ஜெயராமன் கதை (படங்களுடன்) ... ... | 45 |
| பெரிய இடத்தில் கேளுங்கள் (படத்துடன்) ... ... | 52 |
| தொழிலாளியின் ஆபத்து—படம் ... ... | 54 |
| போதனை முறை போதாது ... ... | 55 |
| குற்றம் செய்ததுண்டா ?—படம் ... ... | 59 |
| இயந்திரத் தொழிலும் மதுபானமும் ... ... | 60 |
| குடியினல் மரணம் அதிகம் ... ... | 63 |
| மிதமாய்ச் குடிப்பவன் கதி—படம் ... ... | 64 |
| பாங்கர் விநாயக ராவ் ... ... | 65 |
| திருட்டுக் குடி ... ... | 74 |
| கடற்கரைக் கிளிஞ்சல் ... ... | 75 |


---


இந்த மாதப்பத்திரிகை வேண்டுவோர் ரூ. 1—0—0 வருஷ சந்தா தொகையுடன் "விமோசனம்" காரியதரிசி, காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு என்ற விலாசத்திற்கு எழுதிப் பதிவுசெய்து கொள்ளலாம். அயல் நாட்டுக்கு அதிக தபாற்கூலி 0—2—0 சேர்த்து அனுப்பவேண்டும். தனிப் பிரதி எல்லாக் காதி வஸ்திராலயங்களிலும் மற்ற விடங்களிலும் பெறலாம். விலை அணு ஒன்று. தபாலில் எழுதிப்பெற்ருல் தபாற்கூலி சேர்த்து 0—1—6.

# வி மோ ச ன ம்


தொகுதி 1 | சுக்ல ௵ புரட்டாசி ௴ | பகுதி 2




# புட்டிச் சரக்கு

மது பானத்தினுல் மக்களின் உடலுக்கும் ஒழுக்கத்துக்கும் விளையும் தீங்குகள் அனைவரும் நன்கறிந்தவையே யாகும். அது சுதேசிச் சரக்காயினும், சீமைச் சரக்காயினும், புட்டியிலடைத்து விற்பதானுலும் பானையில் வைத்து மொந்தையில் குடிப்பதானுலும் விளைவது கெடுதியேயல்லாது வேறில்லை. ஆனுல் புட்டியிலடைத்து வரும் பீர், பிராந்தி, வுஸ்கி முதலிய சீமை மது வகைகளும், இவைபோன்று உள்நாட்டில் செய்யப்படும் புட்டிச் சரக்குகளும் அதிக தீமைகளுக்குக் காரணமாயிருக்கின்றன. முதலாவது, அவைகளின் மூலம் உண்டாகும் பொருள் நஷ்டம் நாட்டுச் சரக்கைக் காட்டிலும் அதிகம். இரண்டாவது, உள்நாட்டுக் கள்ளு சாராயத்துக்கில்லாத ஒருவகைக் கௌரவம் புட்டிகளில் வரும் சீமை மது வகைகளுக்கு இருப்பதால் அவற்றைத் தொலைப்பதில் கஷ்டம் அதிகம். கள்ளையும், சாராயத்தையும் ஜனங்கள் கடைகளில் வாங்கி அங்கேயே குடித்துவிட்டு வருகிருர்கள். ஆனுல் புட்டியிலடைத்த பீர், ஒயின், பிராந்தி முதலிய மது வகைகள் வீட்டுக்குள்ளும் நுழைந்து விடுகின்றன. இதனுல் குடிப்பழக்கம் ஸ்திரீகள், சிறுவர்களுக்குள்ளும் பரவக்கூடிய அபாயம் நேரிடுகிறது.

காங்கிரஸ் மகாசபையாவது, மது விலக்குச் சங்கத்தாராவது மது வகைகளுக்குள் பரதேசி சுதேசி என்ற வித்தியாசம் பாராட்டுவதாக யாரும் எண்ணவேண்டாம். போதை தரும் குடிவகைகள் எல்லாவற்றையும் அடியோடு ஒழித்துவிட வேண்டு மென்பதுதான் நமது நோக்கம். இந்தக் கட்டுரையில் மதுபான வர்க்கங்களில் ஒரு பகுதியைப்பற்றி மட்டும் நாம் எழுதுகிறேம். இதிலிருந்து, பூரண மது விலக்குப் போரில் நமது முயற்சியைத் தளர்த்தி விடலாமென்று நினைத்தல் கூடாது. சீமைச் சரக்குகளைக் குடிப்பவர்கள் இங்குள்ள வெள்ளைக்காரராகவே யிருக்கும் பட்சத்தில் அவைகளைச் சட்டத்தில் சேர்க்காமல் விட்டு விடவும் ஒரு வேளை யோசிக்கலாம். இந்தியாவில் வந்து குடியேறி யிருக்கும் அன்னிய நாட்டுச் சகோதரர்கள் நமக்காகத் தங்கள் மதுபான வழக்கத்தை விட முடியாதென்று சொன்னுல் அவர்களை நாம் கட்டாயப்படுத்தாமல் விட்டு, இந்திய மது வகைகளை ஒழிப்பதிலேயே கவனம் செலுத்தலாம். ஆனுல் நிலைமை அவ்வாறில்லை. இந்தியாவில் சீமை மதுவின் சரித்திரத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போமாயின், மேற் கூறியபடி அதற்குச் சட்டத்தில் தாட்சண்யம் காட்ட முடியாதென்பது நன்கு விளங்கும்.



சீமையிலிருந்து வரும் பீரையும், சாராயங்களையும் போன்று அதே அளவு மது சாரமுள்ள பீர், சாராயங்கள் வருஷா வருஷம் அதிகமாய் இந்தியாவில் உற்பத்தியாகி உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அப்படியிருந்தும், சென்ற சில வருஷங்களாக, சீமைச் சரக்குகளின் இறக்குமதியும் அதிகமாகியே வந்திருக்கிறது.

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு சீமை மது வர்க்கங்களின் இறக்குமதியைப் பற்றி இந்திய அரசாங்கத்தார் ஒருவாறு சொன்னார்கள். “சுதேச ஜனங்களுக்குள்ளே சீமை மதுவகைகளின் குடிப்பழக்கம் பரவுமாறு விடுதல் அரசாங்கத்தின் கொள்கையன்று. ஐரோப்பியர்களோ, பார்ஸிகளோ, அல்லது சீமை மது வகைகள் அருந்தும் பழக்கமுள்ள வேறு ஜனங்களோ வசிக்கும் இடங்களில் மட்டுமே அவை விற்கப்பட வேண்டுமென்று திட்டம் செய்யப்பட்டிருக்கிறது” என்று 1906-ம் ஆண்டில் இந்தியக் கலால் கமிட்டியார் எழுதினார்கள். இந்தக் கொள்கையையனுசரித்து நிர்வாகம் நடத்தப்பட்டிருக்கிறதா வென்று பார்ப்போம். 1904-05-ம் வருஷத்தில் 12,97,611 காலன் * மதுவகைகள் இந்தியாவில் இறக்குமதி யாயின. சென்ற 1927-28-ம் வருஷத்தில் இறக்குமதி 62,07,340 காலனுக்கு வளர்ந்துவிட்டது. சென்ற இருபது வருஷத்தில் ஜனத்தொகையும் கொஞ்சம் பெருகி யிருக்குமே என்று சொல்லக்கூடும். ஆனால் சீமைச் சாராய இறக்குமதி 100க்கு 500 வீதமல்லவா பெருகியிருக்கிறது? மேலே எடுத்துக்காட்டிய அரசாங்கக் கொள்கை என்னவாய் முடிந்தது?

ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், பார்ஸிகள் முதலிய சிறு சமூகத்தாரிடம்தான் முதலில் சீமை மது அருந்தும் வழக்கம் இருந்து வந்தது. இப்போது அது மற்றப் பொது ஜனங்களிடையேயும் பரவி வருகிறதென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இறக்குமதியாகும் சீமைச் சரக்குகளில் பாதிக்குமேல் இந்தியருக்குள்ளே செலவாகிறதென்று ஒருவர் கணக்கிட்டிருக்கிறார்.

இவ்வாறு சீமை மது இறக்குமதி பெருகுவதை நியாயமானதென்று ஸ்தாபிக்கும்பொருட்டுக் கலால் இலாகா அறிக்கைகளில் காரணங்கள் சொல்லப்படுகின்றன. விவசாயமே முக்கிய தொழிலாயிருந்த நாட்டில் இப்போது பல்வேறு தொழில்கள் பரவி யிருப்பது, சமூக சமயக் கட்டுப்பாடுகள் தளர்ந்திருப்பது, தேசத்தின் செல்வமும் ஜனத்தொகையும்

* ஒரு காலன் = எட்டு புட்டி.

அபிவிருத்தி யடைந்திருப்பது, கலால் சட்டத்தை முன்னைவிட நன்றாக அமுல் நடத்தித் திருட்டுச் சாராயங் காய்ச்சுவதைத் தடுத்து வருவது; இக் காரணங்களை இறக்குமதி அதிகமாவதின் காரணங்களாக எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் இவை சரியான சமாதானமாகா.

அரசாங்கத்தார் இது சம்பந்தமாகத் தங்கள் மனோபாவம் என்ன வென்பதைத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டுமென நாம் கேட்கிறோம். "எங்கள் கொள்கையை மாற்றிக்கொண்டு விட்டோம். சீமைக் குடி வகைகள் இந்தியரிடையே பரவாமல் தடுப்பது இனிமேல் எங்கள் கொள்கை யன்று. கலால் இலாகா நிர்வாகத்தின் முக்கியமான நோக்கம் வருமானம் ஒன்றுதான். ஜனங்கள் எங்கெங்கே குடிக்க முன் வருவார்களோ அந்த இடங்களிலெல்லாம் சுதேசிச் சரக்கோ, பரதேசிச் சரக்கோ விற்பதற்குக் கடைகள் வைப்போம். அரசாங்கம் மது வியாபாரத்தில் சம்பந்தப்படுவது தவறு என்று சொல்வோருக்குச் செவி கொடுக்கமாட்டோம்" என்று அவர்கள் பகிரங்கமாய்க் கூறிவிடட்டும்.

சமூக, சமயக் கட்டுப்பாடுகள் தளர்ந்து வருகின்றன வென்று கலால் இலாகா அறிக்கைகள் ஒப்புக் கொள்கின்றன. நல்ல விஷயத்தில் அக் கட்டுப்பாடுகள் தளர்வதைத் தடுக்க அரசாங்கத்தார் ஒன்றும் செய்ய வேண்டாமா? சமய, சமூகக் கட்டுப்பாடுகள் ஜனங்களின் சுகாதாரத்துக்கும், சமூக க்ஷேமத்திற்கும் ஒத்தனவா யிருக்கும்போது அவற்றிற்குப் புத்துயிர் தந்து பலப்படுத்துவ தல்லவா நியாயம்?

இந்தியாவிலே கீழ் வகுப்பார், மேல் வகுப்பார் என்னும் வித்தியாசமின்றி எல்லாருக்கும் குடி யென்பது கொடிய சத்துருவாகும். இதைத் தேசமக்கள் நன்கறிந்து தற்போதைய கலால் முறையை உடனே மாற்றி விடவேண்டுமெனக் கோருகிறார்கள். பாரத நாட்டின் பழமையான் தர்மமும், ஜனங்களின் உள்ளத்தில் நிலை பெற்றிருக்கும் தீவிர நம்பிக்கையும் இந்தக் கோரிக்கையை வற்புறுத்துகின்றன. இதற்குப் பதிலாகப் பூரண மது விலக்குச் சட்டம் செய்வதில் உள்ள கஷ்டங்களை எடுத்துக் காட்டுவதில் பயனில்லை. அந்தத் தடைகளை விலக்கி ஜனங்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு வழி தேடுவதே அரசாங்கத்தின் கடமையாகும்.

# ஜெயராமன் பள்ளிக்கூடம் போன கதை.

(க)

“ உன் பெயரென்ன ?” என்றார் வாத்தியார்.

“ ஜெயராமன் ” என்றான் பையன்.

சிறுவனுடைய முகம் வாடி உடல் மெலிந்து கண்கள் குழி விழுந்து பார்க்கப் பரிதாபமா யிருந்தது. மேலே போட்டிருந்த சட்டை யாரோ பெரிய பையனுடையது, இவனுக்காகத் தைத்ததல்ல வென்று பார்க்கை யிலேயே தெரிந்தது. இடுப்பில் கட்டியிருந்த துணியில் அங்கங்கே பொத்தல்கள். தலைக்குப் போட்டிருந்த குல்லாய் பல தினுசு துணிகளால் அங்கங்கே ஒட்டுகள் போடப்பட்டிருந்தது. ஓரமெல்லாம் இற்றுப்போய் நூல் தொங்கிற்று. தலை மயிர் முழுதும் மொட்டையடித்துப் பல இடங்களில் புண் வந்த சொட்டை தெரிந்தது.



“ உன் வயதென்ன, பையா ! ” என்று கேட்டார் வாத்தியார்.

“ஒன்பது, ஐயா ” என்றான் சிறுவன்.

எல்லாப் பையன்களும் சிரித்தார்கள். முதல் வகுப்புக்கு ஒன்பது வயதுப் பையன் வந்தானே யென்று அவர்களுக்கு வேடிக்கை. வாத்தியாரும் நகைத்துக் கொண்டே “ சத்தம் ! ” என்று கத்தினார். பையன்கள் வாய்மேல் கைகள் வைத்து மூடிக்கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கண்களால் சிரித்தார்கள்.

“ ஏன் இத்தனை நாள் பள்ளிக்கூடத்தில் சேரவில்லை ?” என்றார் வாத்தியார்.

பையன் பதில் சொல்லாமல் தரையைப் பார்த்தான்.

“ ஏன் ?” என்றார் வாத்தியார் மறுபடியும்.

“ அம்மாவுக்கு வீட்டில் துணை யாருமில்லை. குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தேன் ” என்றான்.

மறுபடியும் வகுப்பிலுள்ள பையன்கள் சிரித்தார்கள்.

“ உன் தகப்பனார் பெயரென்ன ?” என்றார்.

சிறுவன் பதில் சொல்லுவதற்குமுன் ஒரு பையன் எழுந்து "இவன் சாராய சுப்பன் மகன், ஸார்" என்றான்.

எல்லாரும் "கொல்" என்று சிரித்தார்கள். பையன் தலை குனிந்தான்.

இதற்குள் மத்தியான விடுதி மணி யடித்தது. பிள்ளைகளெல்லாம் வெளியே போய் ஓடிக் குதித்து விளையாடினார்கள். ஜெயராமனைச் சுற்றிப் பத்துச் சிறுவர்கள் சூழ்ந்துகொண்டார்கள்.

"உன் டொப்பியைக் கொடு பார்க்கலாம்" என்றான் ஒருவன்.

"அடே அதை யேன் தொடுகிறாய்? புண் ஒட்டிக்கொள்ளும்" என்றான் ஒருவன்.

"குப்பையில் கிடந்ததை, பாவம், அவன் அம்மா எடுத்துத் தைத்து சரிப்படுத்திக் கொடுத்திருக்கிறாள்" என்றான் ஒருவன்.

"குழந்தை எடுத்துக்கொள்ள வீட்டுக்குப் போ" என்றான் மற்றொருவன்.

"சொக்காய் யாருடையதடா?" என்றான் இன்னொருவன்.

"உங்கப்பன் நேற்று எத்தனை குடித்தான்?" என்றான் ஒருவன்.

"அடே, இவனண்டை சாராய நாற்றமடா. இவனும் குடிப்பான் போலிருக்கிறது" என்று ஒரு சிறுவன் இவனை மோந்து மூக்கைப் பிடித்துக்கொண்டு சுற்றிச் சுற்றி ஓடினான்.

"அடே, நேற்று சாக்கடை டிச்சில் கிடந்தானே அவனா உன் அப்பன்?" என்றான் ஒருவன்.

"சாராய சுப்பன் மகன்!" என்றான் ஒரு பையன். உடனே எல்லாப் பையன்களும் 'சாராய சுப்பன் மகன்', 'சாராய சுப்பன் மகன்' என்று சொல்லிக்கொண்டு அவனைச் சுற்றிச் சுற்றி ஓடினார்கள்.

"அடே, இவன்கூட நாம் எப்படியடா உட்காருகிறது?" என்றார் சிலர்.

இப்படிப் பலவாறு கேலி செய்வதைப் பொறுக்கமுடியாமல் பையன் கண்களில் ததும்பின கண்ணீரை அடக்கி யடக்கிப் பார்த்தான். கடைசியில் தாங்கமுடியாமல் போய் திடீரென்று ஒன்றும் சொல்லாமல் வெளியே ஓடினான். எல்லாரும் கூட்டமாய் அவன்பின் ஓடினார்கள். தெருவு சேர்ந்ததும் ஒரே ஓட்டம் பிடித்தான். குழந்தைகள் எல்லாரும் இரைச்சல் போட்டுக்கொண்டு கொஞ்சதூரம் பின்னால் ஓடினார்கள். ஜெயராமன் ஒரு சந்துக்குள் திரும்பி மறைந்துபோனான்.

* * * *

"அம்மா !" என்று வீட்டில் தன் தாயார் மடியில் தலைவைத்து விம்மி விம்மி அழுதான்.

"என் அப்பனே ! என் கண்மணியே ! ஏன் அழுகிருய் ? பள்ளிக் கூடத்தில் சேர்க்கமாட்டேன் என்ருர்களா ?" என்று அவன் தாயார் அவனைக் கட்டி முத்தமிட்டாள். கேட்கக் கேட்கப் பையன் பதில் சொல்ல முடியாமல் அழுதுகொண்டே யிருந்தான்.

* * * *

மறுபடி பள்ளிக்கூடத்தில் மணியடித்துக் குழந்தைகள் சேர்ந்ததும் வாத்தியார் "எங்கே புதுப் பையன்" என்று விசாரித்தார்.

"ஐயா, அவன் ஓடிப் போய்விட்டான். அவன் வரமாட்டான்" என்று ஒரு பையன் சொன்னன்.

"ஏன் ?" என்று கேட்டார் வாத்தியார்.

"எல்லாரும் கேலி செய்தார்கள். அவன் பாவம் அழுதுகொண்டு ஓடிப் போய்விட்டான்" என்று எல்லாரையும்விடச் சிறிய ஒரு பையன் சொன்னன்.

"குழந்தைகாள் ! நீங்கள் செய்தது தவறு" என்று வாத்தியார் சொன்னர். எல்லாரும் தலை குனிந்துகொண்டார்கள்.

"உங்களுக்குள் யாருக்கு அவன் வீடு தெரியும் ?" என்று வாத்தியார் கேட்டார்.

'எனக்குத் தெரியும்', 'எனக்குத் தெரியும்', என்று பல பிள்ளைகள் எழுந்தார்கள்.

"போய் அவனைச் சமாதானப்படுத்திக் கூட்டி வரவேண்டும், யார் போவீர்கள் ?" என்ருர் வாத்தியார்.

"ஐயோ ! அவன் அப்பன் அடித்துப் போடுவான்" என்ருன் ஒருவன். மற்றவர்களும் ஒருவரை யொருவர் பார்க்க ஆரம்பித்தார்கள். பிறகு ஒரு பையன், "நான் போய் அழைத்து வருகிறேன், ஐயா !" என்ருன்.

"பேஷ், சுந்தரம் !" என்ருர் வாத்தியார். "போய் அவன் தாயாருக்குச் சொல்லிக் கூட்டிக்கொண்டு வா" என்று சொல்லி யனுப்பினர்.

"உதை தின்று வருவான்" என்று பையன்கள் ஒருவருக்கொருவர் மெள்ளச் சொல்லிக்கொண்டார்கள்.

(உ)

சுப்பா நாயுடு பெரிய குடிகாரன். இதனல் அவனுக்கு ஊரில் 'சாராய சுப்பன்' என்றும் 'டிராம் சுப்பா நாயுடு' என்றும் பேர் வழங்

கும். அவன் தகப்பனார் நல்ல பணக்காரரா யிருந்தார். சிறு வயதிலேயே அவன் தாயார் இறந்து போய்விட்டாள். தகப்பனார் மகனை மிகச் செல்வமாய் வளர்த்தார். பையன் 16 வயது வரையில் நன்றாய்ப் படித்தான். பிறகு கெட்ட சகவாசத்தினால் துர்வழக்கங்கள் பயின்றான். தகப்பனார் அவனை முதலில் கண்டிக்கவில்லை. பிறகு கண்டித்தும் பயன்படவில்லை. 22 வயது ஆனதும் விவாகம் செய்து வைத்துப் பார்த்தார். அதனால் திருந்திவான் என்று நினைத்தார். அதுவும் பயனில்லாமல் போயிற்று. குடித்துவிட்டு வெட்கக் கேடான காரியங்கள் செய்வான். அந்த விசனத்திலேயே தகப்பனார் இறந்தார். தகப்பனார் இறந்தபின் சுப்பா நாயுடுவின் சகாக்கள் அவனை முழுதும் கெடுத்தார்கள். தலைக்குமேல் கடன் பட்டான். கொஞ்ச நாளில் சொத்தெல்லாம் பாழாயிற்று. சோற்றுக்கே திண்டாட்டமாயிற்று. கடன்காரர்களின் தொல்லையால் கோர்ட்டுக்கும் வக்கீல்களிடமும் போய் அலைந்ததில் நல்லவேளை விண்ணப்பம் எழுதப் பழக்கமாயிற்று. சொத்து முழுதும் போய் ஆசை தீர்ந்தபின் விண்ணப்பம் எழுதுவதே ஒரு தொழிலாக வைத்துக்கொண்டு தினம் ஒரு ரூபாய் சம்பாதித்து 10 அணா குடித்துப்போட்டு மிஞ்சியதைச் சோற்றுக்கு மனைவியிடம் கொடுப்பான். ஒவ்வொரு நாள் அதுவுமில்லை. மனைவியை அடிப்பான். குடிவெறியில் ஒவ்வொரு நாள் அவளை வெளியில் தள்ளிக் கதவைத் தாள் போட்டு விடுவான்.

குடியிருந்த வீடும் கடன்காரர்கள் சுவாதீனம் செய்துகொண்டார்கள். அப்போது பெரிய கலகம் செய்து கோர்ட்டு சேவகனைக் கத்தியால் வெட்டினான். போலீசார் வந்து பிடித்துப் போய் விசாரணையாகி ஆறு மாதம் சிறையில் போட்டார்கள். குடும்பம் பசியால் தவித்தது. புருஷன் சிறையிலிருக்கையில் அவன் மனைவி கடன்காரனிடம் வாடகைக்குச் சீட்டு எழுதிக்கொடுத்து அதே வீட்டில் குழந்தையுடன் குடியிருந்து வந்தாள். பிறகு அதுவும் கூடாது என்று கடன்காரன் சொல்லத் தன் பந்துக்களைக் கெஞ்சி ஒரு புழக்கடைத் தாழ்வாரத்தில் படல் கட்டிக் கொண்டு குடியிருந்து வந்தாள். சிறையிலிருந்து திரும்பினதும் சுப்பா நாயுடு முன்னைவிட அதிகம் குடிக்கலானான். மற்றவர்களைவிட இவன் நன்றாய் விண்ணப்பம் எழுதுவான். குடிகாரனாயிருந்தாலும் எல்லாரும் இவனண்டையே வந்து எழுதச் சொல்லுவார்கள். தினம் ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் கூடச் சம்பாதிப்பான். ஆனால் அவ்வளவும் சாயந்திரம் சாராயக் கடைக்கே போகும். ஒவ்வொரு நாள் அதிக போதையாகித் தெருவிலும் சாக்கடையிலும் இரவெல்லாம் கிடப்பான். மறுநாள் விண்ணப்பம் எழுதக்கூட ஆகாது. அன்று சோற்றுக்கு இல்லாமல் வீட்டில் பெருங்கலகம் செய்வான்.

மனைவி கூலி வேலை செய்யவேண்டியதாயிற்று. முதல்முதலில் தெரிந்தவர்கள் சிலர் வீட்டுக்குப் போய் அறைக்கவும் இடிக்கவும் ஒப்புக்கொண்டு கால்படி அரைப்படி அரிசி சம்பாதித்துக் காலம் தள்ளினுள். பிறகு எல்லார் வீட்டுக்கும் போனுள். கைக் குழந்தை ஒன்று. அதை ஜெயராமன் கையில் கொடுத்துவிட்டு வேலைக்குப் போவாள். அச்சமயம் சுப்பா நாயுடு வீட்டுக்கு வந்தால் ஜெயராமன் கதி பரிதாபம். எங்கே உன் தாய் என்று உதைப்பான். குழந்தைக்கு அடிபடுமென்று ஜெயராமன் பதுங்கிப் பதுங்கி உடலெல்லாம் உதை வாங்கிக்கொள்ளுவான். "ஓ!" என்று வலி பொறுக்கமுடியாமல் அலறி யழுவான்.

ஒவ்வொரு நாள் சுப்பா நாயுடுவுக்கு நல்ல புத்தி வரும். பையனையும் குழந்தையையும் கட்டிக்கொண்டு அழுவான். இனி சாராயக் கடைப் பக்கம் போகவே மாட்டேன் என்று தீர்மானித்துக்கொள்ளுவான். ஆனல் அடுத்த சாயந்திரமே கச்சேரியில் விண்ணப்பங்கள் எழுதிவிட்டு வீடு திரும்பி வரும்வழியில் சாராயக் கடையண்டை வரும்போது எல்லாம் மறந்துபோகும். தன்னை யறியாமல் கடைக்குள் போவான். மறுபடி பழைய கதைதான்.

(௩)

கைக் குழந்தை கொஞ்சம் பெரிதானதும், எல்லாப் பையன்களும் பள்ளிக்கூடம் போவதைப் பார்த்து வந்த ஜெயராமனுக்குத் தானும் போய்ப் படிக்கவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. "இனி குழந்தை பெரிதாயிற்றம்மா. தானே விளையாடிக்கொள்ளும்; நான் பள்ளிக்கூடம் போகிறேனம்மா" என்று தாயாரிடம் சொன்னுன்.

"என் கண்ணே! நீ பள்ளிக்கூடம் எப்படிப் போவாய்? உனக்கு மேலே போட்டுக்கொள்ள சட்டைகூட இல்லையே. துணி யெல்லாம் கந்தலாயிற்றே. எல்லாரும் உன்னைக் கேலி பண்ணுவார்கள். நீ நெஞ்சு உடைந்துபோவாய்" என்ருள்.



"இல்லை யம்மா. பக்கத்து வீட்டுக் கிட்டு ஒரு சொக்காய் கொடுக்கிறேன் என்று சொல்லுகிருன். கிழிசல்களை யெல்லாம் தைத்துக்கொடு. கேலி செய்யமாட்டார்கள். செய்தாலும் என்ன? நான் பயப்படமாட்டேன். பள்ளிக்கூடத்திற்கு அனுப்பு" என்று பையன் கெஞ்சினுன்.

"ஐயோ, குழந்தாய், மாதம் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் சம்பளம் கேட்பார்களே" என்ருள்.

“ இல்லே, அம்மா ! சந்தைப் பேட்டையிலிருக்கும் மஞ்சள் பள்ளிக் கூடத்தில் நாலு அணுதான் சம்பளம். அதில் சேருகிறேன் ” என்ருன்.

வெகு பாடுபட்டு இங்கும் அங்கும் கெஞ்சிக் குல்லாய் ஒன்று சம்பா தித்துக் கிழிந்துபோன விடத்திலெல்லாம் ஒட்டுப் போட்டுத் தைத்துப் பையனைப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு நல்ல நாள் பார்த்து அனுப்பினுள். பிறகு நடந்ததை மேலே சொன்னேம்.

* * * *

“ஜெயராமனைக் கூட்டிவரச் சொன்னுர் வாத்தியார்” என்ருன் சுந்தரம்.

“ வேண்டாமப்பா. ஏழைகளுக்குப் படிப்பு என்னத்திற்கு ?” என்ருள் ஜெயராமன் தாயார்.

“வாத்தியார் கூட்டிவரச் சொன்னுர். நான் அழைத்துப் போகி றேன், அனுப்புங்கள்” என்ருன் சுந்தரம்.

தாய் மகனைப் பார்த்தாள்.

“ அம்மா ! நான் போகமாட்டேன். எனக்குப் படிப்பு வேண்டாம்” என்ருன் ஜெயராமன்.

“இல்லே, ஜெயராமா, பயப்படாதே. பையன்களெல்லாம் உன் னைக் கூட்டிவரச் சொன்னுர்கள். யாரும் கேலி செய்யமாட்டார்கள் ” என்ருன் சுந்தரம்.

“ மாட்டேன், வேண்டாம்” என்ருன் ஜெயராமன்.

“ அப்பா, நீ போ. அவன் வரமாட்டான். குழந்தையைப் பார்த் துக்கொள்ள வீட்டில் யாருமில்லே. நான் மிளகாய் இடிக்க வெளியே போனல் குழந்தையை ஜெயராமனிடம்தான் கொடுத்துப் போகவேண் டும். ஏழைகளுக்குப் படிப்பு என்னத்திற்கு ? நீ போ, அப்பனே. வாத்தி யாருக்குச் சொல் ” என்ருள்.

சுந்தரம் திரும்பிப் போய்விட்டான்.

சுப்பா நாயுடு அன்று வீட்டுக்கு வந்ததும், “ யார் உன்னைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினது. என்னை எல்லாரும் கேலி செய்யவா போனய் ?” என்று பெருங் கோபத்துடன் கூச்சலிட்டு ஜெயராமனை ஒரு உதை உதைத்தான். வலி பொறுக்கமுடியாமல் அவன் சுருண்டு கீழே விழுந்தான்.

“ஏன் குழந்தையை உதைக்கிறீர்கள் ? நான்தான் அனுப்பினேன்” என்று மனைவி குழந்தைக்குப் பக்கத்தில் வந்தாள்.

பளீர் என்று அவள் தாடையில் ஒரு அறை அறைந்தான். அவள் அப்படியே சுவர்மேல் சாய்ந்தாள். இன்னெரு அடி அடித்தான். கீழே விழுந்தாள். சுப்பா நாயுடுவுக்குக் கோபம் அதிகரித்தது. பக்கத்திலிருந்த உலக்கையை எடுத்தான்.

"எழுந்திரு !" என்ருன்.

"ஐயோ !" என்று எழுந்தாள்.

"நான் குடிகாரன் என்று எல்லாரும் ஏசவா மகனைப் பள்ளிக்கூடம் அனுப்பினுய் ?" என்று வீடு அதிரக் கத்தி உலக்கையைத் தூக்கினுன்.

"இல்லே, நாயனு ! அம்மா அனுப்பவில்லே. நான்தான் போனேன். அவள் வேண்டாம் என்றுதான் சொன்னுள்" என்று ஜெயராமன் கதறிக் கொண்டு எழுந்து தகப்பன் கையைப் பிடித்துக்கொண்டான்.

"விடு" என்று உலக்கையால் ஒரு குத்துக் குத்தினுன். அது பையன் விலாவில் பட்டு அவன் கீழே விழுந்தான். விழுந்தும் ஒரு கையால் தன் வயிற்றை அமுக்கிக்கொண்டு மற்ருெரு கையால் தகப்பன் காலேப் பிடித்துக்கொண்டான்.

"இன்று என்னவானுலும் ஆகட்டும். நான் யாருக்கும் பயப்பட வில்லே. தீர்த்து விடுவதுதான் சரி!" என்று பையனை ஒரு உதை உதைத்துத் தள்ளி உலக்கையை வீசி மனைவியைப் பார்த்துப் போட்டான். அந்த அடி சுவரில் பட்டுத் தப்பினுள். இல்லாவிடில் மண்டை பொடி யாய்ப் போயிருக்கும்.

இதற்குள் கூச்சல் கேட்டு அண்டை வீட்டுப் பெண்கள் சிலர் ஓடி வந் தார்கள். சிலர் இது எப்போதும் நடப்பதுதான் என்று காதில் போட்டுக் கொள்ளாமலிருந்தார்கள். ஆனுலும் கூட்டம் சேர்ந்துவிட்டது. சுப்பா நாயுடு உளறிக்கொண்டு வெளியே போய்விட்டான்.

பையன் நினைவு தப்பிக் கிடந்தான். "ஐயோ, என் குழந்தாய், உன்னை நான் கொன்றேனே!" என்று தாய் கதறினுள். எல்லாரும் எடுத்துத் தூக்கிப் படுக்கவைத்துத் தண்ணீர் கொடுத்தார்கள். உயிர் துடி துடி யென்று அடித்துக்கொண்டிருந்தது.



"பிழைப்பானே தெரியவில்லேயே !" என்ருள் தாய்.

"பாவி ! இப்படி யடிக்கலாமா" என்ருர்கள்.

"அந்தப் பாழுஞ் சாராயக் கடைகள் ஏன் வைத்தார்களோ" என்ருள் ஒருத்தி.

ஒரு நாழிகையில் கை கால் குளிர்ந்து போயிற்று. "ஐயோ கெட் டேன் !" என்று தாய் கூக்குரலிட்டாள். ஜெயராமன் துயரக்கூட்டி னின்று விடுதலே யடைந்து அன்பே உருவமான அன்னை மடியில் போய்ச் சேர்ந்தான். அவனுக்கு இந்தப் பள்ளிக்கூடங்கள் இனி என்னத்திற்காக ?

# பெரிய இடத்தில் கேளுங்கள்!

சின்னசாமி செட்டியார் பெரிய வியாபாரி. மூன்று தலைமுறையாகக் கொடுக்கல் வாங்கல் நடத்தின லக்ஷாதிபதி. சென்ற வருஷத்தில் ஜில்லா போர்டு பிரெஸிடெண்டு ஆனார். மந்திரிக்கு நிரம்ப வேண்டியவர். கவர்னர்கூட ஒரு சமயம் இவருடன்



கை குலுக்கி, "க்ஷேமமா?" என்று கேட்டார். ராவ் பகதூர் பட்டம் வருவதற்கு எல்லா ஏற்பாடும் செய்யப் பட்டு வந்தது. ஒரு நாள் செட்டியார் தன் நண்பர் பார்த்தசாரதி முதலியாரைப் பார்த்துச் சொல்லுகிறார்:

"இப்போது மதுவிலக்குப் பேச்சு எங்கே பார்த்தாலும் பேசுகிறார்களே, இதை நீர் ஒப்புக்கொள்ளுகிறீரா? ஏழைகள் குடித்தாலென்ன? மிதமிஞ்சிக் குடிக்கக் கூடாதுதான். ஆனால் அடியோடு கூடாது என்று சொல்லுவது நியாயமில்லை" என்றார்.

"நீங்கள் சொல்வது உண்மையே. நீங்கள் குடிக்கப் போகிறீர்களா?" என்றார் பார்த்தசாரதி முதலியார்.

"அந்தச் சனியன் எனக் கென்னத்திற்கு! நான் அதைத் தீண்ட மாட்டேன்" என்றார் செட்டியார்.

"கள்ளு வேண்டியதில்லை, நல்ல சீமை தினுசுகள் குடிக்கலாமே" என்றார் முதலியார்.

"அது நமக்கு வேண்டாம், வேண்டாம்" என்றார் செட்டியார்.

"உங்களுடைய குமாரன் குடிக்கலாமா?" என்றார் நண்பர்.

"சீ, சீ. அவனுக்கு என் அந்தப் பழக்கம்! வேண்டாம்" என்று சின்னசாமி செட்டியார் வெகு அழுத்தமாகச் சொன்னார்.

"தங்களுடைய குமாஸ்தாக்கள் குடிக்கலாமா?" என்று கேட்டார் நண்பர்.

"அது கூடாது. என் வேலைக்காரர்கள் யாரும் குடிக்கக்கூடாது. குடிப்பதாகத் தெரிந்தால் வேலையில் வைத்துக்கொள்ள மாட்டேன்" என்றார் செட்டியார்.

"தங்களிடம் கொடுக்கல் வாங்கல் செய்துவரும் வியாபாரிகள் குடிக்கலாமே?" என்று நண்பர் கேட்டார்.

"வியாபாரிகள் குடிக்கலாமா? அவர்கள் குடிக்க ஆரம்பித்தால் முதலே காணாமல் போகும். என் ஆசாமிகளில் யாரும் குடிப்பதென்பது கூடாது. அந்த சமாசாரம் யாரிடமாவது உண்டென்று தெரிந்தால் அவர்களுடைய கணக்கை முடிவுகட்டி விடுவேன்" என்றார்.

"சரி, தங்களுடைய ஜவுளிக்கடை, மளிகைக் கடைக்கு வருபவர்கள் குடிக்கலாமா?" என்றார் நண்பர்.

"குடிப்பவன் கையில் என்ன காசு மிஞ்சும்? அவனிடம் என்ன வியாபாரம் நாம் செய்ய முடியும்? சம்பாதித்ததைக் கள்ளுக் கடைக்குக் கொடுத்துவிட்டுப் பிறகுதான் நம்மிடம் வருவான். சாமான் கடனாக வாங்குவான். பிறகு ஏமாற்றுவான்" என்றார்.

"தங்கள் மோட்டார் ஓட்டுகிறவன் குடிக்கலாமா?" என்றார் நண்பர்.

"ஐயோ! நல்ல பேச்சு சொன்னீர்! குடிப்பவனை நம்பி மோட்டார் வண்டியைக் கொடுக்கலாமா? பிராணனுக்கே ஆபத்துதான். அதிலும் இந்நாளில் பட்டணத்தில் வண்டியில் வெளியே போனால் வீட்டுக்கு க்ஷேமமாய்த் திரும்புவதே புனர்ஜன்மம். எந்த நிமிஷம் பஸ் வண்டியும், மோட்டார் வண்டியும் மோதி ஆபத்து வருமோ சொல்ல முடியாது. வண்டியேறினால் கையில் உயிரை வைத்துக்கொண்டுதான் போகவேண்டும். மோட்டார் வண்டி ஓட்டுகிறவர்களுக்குக் குடி என்பது கூடவே கூடாது."

"தங்களுடைய டிரைவர் வேண்டாம். மற்றவர்களுடைய டிரைவர்கள் குடிக்கலாமோ இல்லையோ?" என்று கேட்டார் நண்பர்.

"அதென்ன பயன்? எவன் குடித்தாலும் ஆபத்துத்தான். நம்முடைய வண்டிக்காரன் ஜாக்கிரதையாயிருந்தால் மாத்திரம் என்ன? எதிரில் வருகிற வண்டிக்காரன் குடித்துவிட்டு வந்தால் நமக்கு ஆபத்துதானே" என்றார் செட்டியார்.

"தங்கள் மில்லில் கூலி வேலை செய்கிறவர்கள் குடிக்கலாமோ இல்லையோ?" என்று கேட்டார் நண்பர்.

"குடிகாரன் வேலை கால் வேலை அரை வேலைதான். கள்ளைத் தின்னாதவன் பகல் ஒரு வேளை செய்யும் வேலையும் ஒன்றே, குடிக்கிறவனுடைய 9 மணி வேலையும் ஒன்றே. தவிர, இயந்திரச் சேதம், திருட்டு, ஓடிப்போவது, கலகம், எல்லாத் தொந்திரவும் குடிகாரர்களால்தான். மில் தொழிலாளர் குடி யில்லாமலிருந்தால் நன்றாய்த்தானிருக்கும்."

"செட்டியாரே! தங்களுடைய அபிப்பிராயம் கள்ளு முற்றிலும் கூடாது என்று இருப்பதாய்க் காண்கிறதே."

"உண்மைதான். ஆனால் பெரிய இடத்தில் இந்த மது விலக்குப் பேச்சு கூடாது என்கிறார்களே? அது என்?" என்று கேட்டார் சின்னசாமி செட்டியார்.

"பெரிய இடத்தில் தாங்களே கேளுங்கள்" என்றார் பார்த்தசாரதி முதலியார்.

---

# தொழிலாளியின் ஆபத்து




சம்பாதித்த கூலியை வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வழியிலிருக்கும் இடையூறுகள்: சாராயம், பீர், கள் முதலியன.

# போதனை முறை போதாது

அமெரிக்காவில் புகழ்பெற்ற பல்கலைக் கழகமான 'யேல்' சர்வ கலாசாலையில் அர்த்த சாஸ்திர ஆசாரியரான இர்விங் ப்ஹீஷர் என்பவர் தம்முடைய நாட்டில் மது விலக்குச் சட்டத்தினால் உண்டான நன்மைகளைப்பற்றி ஒரு அரிய புத்தகம் எழுதியிருக்கிறார். சட்டம் செய்துவிட்டாலும் கூடக் குடியர்கள் எப்படியாவது குடித்துத்தான் தீருவார்கள், நல்லுபதேசத்தினாலேதான் குடிப் பழக்கத்தை ஒழிக்க முடியும், ஒரே தடவையில் குடியை ஒழிக்க முயலுவது தவறு, நிதானமாய்த்தான் குறைக்க முடியும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இவர்கள் ப்ஹீஷருடைய புத்தகத்தைக் கவனித்துப் படித்தல் நன்று. இப் புத்தகம் அமெரிக்கா அரசாங்கத்தார் நியமித்த ஒரு விசாரணைக் கமிட்டியின் முன்பாக ஆசாரிய ப்ஹீஷர் அவர்கள் தயாரித்துக் கொடுத்த சாக்ஷியத்தின் சாராம்சமாகும். இருபது வருஷத்திற்கு மேற்பட்டுத் தம் அனுபவத்தில் கண்டறிந்த விஷயங்களை யெல்லாம் அவ்வப்போது குறித்துக் கொண்டுவந்து கடைசியில் ஆராய்ந்தெடுத்த தொகுதியாகும்.

புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் இவ்வாசிரியர் தம்முடைய சுய சரிதையைச் சுருக்கமாக மனதைக் கவருமாறு சொல்லுகிறார். அவருக்கு 1899-ம் வருஷத்தில் தேக அசௌக்கியம் கண்டதன்மேல் அவர் தம் ஊரைவிட்டு வேறு ஒரு நகரத்திற்கு ஆரோக்கியத்தை நாடிச் சென்றார். போகும்போது 'நீ போகும் ஊரில் டாக்டர்கள் உடம்புக்கு நல்லதென்று உஸ்கி கொடுப்பார்கள். அதற் கிணங்காதே' என்று அவருடைய வைத்தியர் எச்சரிக்கை செய்தனுப்பினார். அக்காலத்தில் மதுசாரம் சில வியாதிகளுக்கு மருந்தாகும் என்று அநேக வைத்தியர்கள் நினைத்திருந்தார்கள். பிறகு ப்ஹீஷருக்கு உடம்பு சொஸ்தமாய்க்கொண்டு வருங்காலத்தில் எவ்வித பத்தியம் இருந்தால் தேகத்திற்கு சுகமென்பதை ஆராய்ந்து வந்தார். மதுபானம் ஆரோக்கியத்திற்குப் பெருந் தடையென்பதை வெகு சீக்கிரம் கண்டுகொண்டார். சரீரத்தின் போஷணைக்கு அது எவ்விதத்திலும் உபயோகமற்றதென்றும் அது சரீரத்திலுள்ள அவயவங்கள் சரிவர வேலை செய்வதைக் கெடுக்கக் கூடிய ஒரு விஷமே யென்றும் கண்டு கொண்டார். அதுவே தற்காலத்தில் பேர்பெற்ற சரீர சாஸ்திர நிபுணர்களின் தீர்மானமாகும்.

மதுபானத்தை மிதமாய் உபயோகிப்பதல்ல வழி, அதைத் தீண்டாமலே யிருப்பதுதான் வழியென்று கண்டுகொண்ட உடனே தம் ஆரோக்

யத்தை உத்தேசித்துத் தன்னைப் பொறுத்தமட்டில் மதுபானத்தைப் பூரணமாய் ஒழித்துவிட்டுத் தன் வீட்டுக்கு வந்த விருந்தினருக்கும் வுஸ்கி முதலிய பானங்களைக் கொடுப்பதை நிறுத்திவிட்டார். பிறகு தாம் சிறப்பாக ஆராய்ந்து வந்த அர்த்த சாஸ்திரத்தில் கண்ட உண்மைகளைக் கொண்டு மதுபான வழக்கத்தைப்பற்றி யோசித்துப் பார்த்ததில் தேசத்தின் பொருளாதார நிலைக்கு அது பலவகைகளிலும் பெருநஷ்டம் உண்டு பண்ணி வருவதைக் கண்டார்.

"வேரூன்றிக்கிடக்கும் இந்த வழக்கத்தை எப்படித் தடுப்பது என்று ஆலோசிக்கலானேன். இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவது கஷ்டமாகத்தானிருந்தது. அநேக மனிதர்களுக்கு இப்பொழுதும் இதற்குத் தகுந்த வழி உண்மையில் தோன்றவில்லை. மது விலக்குச் சட்டம் செய்துவிட்டால், மதுபானத்தை நிறுத்திவிடலாம் என்ற கருத்திற்கு நான் அப்போது இசையவே இல்லை. உண்டு உடுப்பது போன்ற மனிதர்களுடைய சொந்த விஷயங்களைப்பற்றிச் சட்டம் செய்தால் அதை ஒப்புக்கொள்ளாதவர்களுடைய மனதில் வெறுப்பும் கோபமும் தான் உண்டாகும். ஆகையால் அத்தகைய சட்டத்தை நிறை வேற்றுவது மிகக் கடினமாகும். பொது ஜனங்களுடைய மனோ பாவம் போதிய அளவு சாதகமா யிருந்தாலொழிய எந்த விஷயத்தைப்பற்றியும் சட்டங்கள் செய்வது பயனில்லை. அவை வெறும் காகித விதிகளாகத்தான் கிடக்கும். அப்படிச்செய்தால் பொதுவாக அரசாங்க விதிகளுக்கிருக்க வேண்டிய கௌரவமே குறையும். ஆகையால் சட்டம் செய்து மதுவிலக்கு நிறைவேற்ற வேண்டுமானால் பொது ஜனங்களுக்கு முதலில் உபதேசம் செய்து முடிக்கவேண்டுமென்று ஆரம்பத்திலேயே நான் முடிவு செய்துகொண்டேன். இதுதான் முதல் கடமை என்று நினைத்தேன்.

பிறகு வெகு சீக்கிரத்தில் இந்த உபதேசவழியிலுள்ள குறை எனக்குத் தெரிந்தது.

மன உறுதியையே கொல்லும் ஒரு வழக்கத்தினின்று ஒருவனைத் தப்புவிக்கத் தளர்ந்துபோன அவன் புத்தியை நம்பி என்ன பயன்? மதுபானம் அல்லது வேறு லாகிரி வஸ்துவை உபயோகிப்பதால் மன உறுதி தளர்ந்து போகிறது. மன உறுதி தளர்ந்து போனபின் தன் தீர்மானத்தைத் தான் நிறைவேற்றும் மனோதிட மிழந்த குடிகாரன் தன் பழைய வழக்கத்தின் வலையிலே அகப்பட்டு அலைவான். தான் செய்வது தவறு என்று அறிந்தாலும், அறிவைப் பின்பற்றி நடக்கும் மனோசக்தி குடியினால் தளர்ந்துபோய் விட்டிருக்கிறபடியால், அதைச்செய்ய முடியாதவனாகிறான். விஷம் புத்தியைக் கொன்றுவிட்டது; அதன்மேல் புத்தி

யைக் கொண்டு விஷத்தை விலக்க எப்படி முடியும்? வேர் அறுத்த செடிக்குத் தண்ணீர் வார்ப்பதைப் போல்தா ஞகும்.

ஒரு சிலர் நல்லுபதேசத்தின் பயனுக மாறுவதுமுண்டு என்பதை நான் அறிவேன். ஸால்வேஷன் படையார் தினமும் அவ்விதம் சிலரை மீட்டு வருகிருர்கள். ஆனல் இப்படிப் பழைய குடிகாரர்களை யெல்லாம் சரிப்படுத்த முடியுமென்று நாம் நம்பி வேலைசெய்ய முடியாது.

மிதமிஞ்சிக் குடிக்கிறவனைத் திருப்ப அவன் சங்கற்பத்தை நம்பிப் பலனில்லை. மிதமாய்க் குடிக்கிறவனே அவன் புத்தி முழுவதும் கெட்டுப் போகவில்லை யானலும், 'நான்தான் மிதமாய்க் குடிக்கிறேனே, நான் என் குடிப்பதை விடவேண்டும். இதனுல் எனக்கு என்ன கெடுதல் நேரிட்டது?' என்பான். தான் மிதமாய் உபயோகித்து வரும் விஷம் தன் தேகத்தையும் தன் புத்தியையும் தன்னை அறியாமல் வர வரக் கெடுத்துப் பாழாக்கும் என்கிற உண்மையை அவன் அறியமாட்டான். தற்போது மிதமாய் உபயோகிப்பதனுல் பிறகு மிதமிஞ்சி உபயோகித்து அதற்கு அடிமையாகப் போவான் என்பதைத் தெரிந்துகொள்ளமாட்டான்.

இதையெல்லாம் யோசித்து தினசரி மிதமாய்க் கூட மதுபானம் உபயோகிக்கும் வழக்கம் இன்னும் உண்டாகாத வாலிபர்களைத் தான் திருப்ப முயலவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன். நாட்டை முடிவில் மதுபானத்தினின்று விடுவிக்க இது தான் வழியென்று எண்ணினேன். பள்ளிக்கூடங்களில் மதுபானத்தின் கெடுதலைப் பற்றிச் சொல்லி உபதேசித்து எச்சரித்து வருவதுதான் சரியான முறையென்று நினைத்தேன்.

ஆனல் இப்படிச் செய்து பலனடைவதற்கு எத்தனை நாளாகும் என்று எண்ணிப்பார்த்தால் பரிதாபமா யிருந்தது. தவிர ஒருபக்கம் நாம் பள்ளிக்கூடங்களில் வேண்டாம் என்று சொல்லித் தருகிறோம். மற்றொரு பக்கம் அதற்கு எதிரிடையாக வீட்டில் தகப்பன் தமையன் முதலியோருடைய நடவடிக்கைகளும், மதுபானக் கடைகளும் நாம் செய்து வரும் உபதேசத்தைக் கெடுத்துக்கொண்டே வரும். கடைசியில் நான் தெளிவாய் அறிந்தது யாதெனில் 'கடைகள் இருக்கக்கூடாது; அவையே ஏமாந்தவர்களைக் குடிப்பழக்கத்தை விட முடியாமல் செய்கின்றன, அவைதான் குடியை அதிகப்படுத்தியும் வருகின்றன' என்பதே. பழைய குடிகாரர்களைப்பற்றி நாம் கவனிக்காம லிருந்து விடலாம். அவர்கள் ஒழிந்தபின் அவர்கள் ஸ்தானத்தில் அவர்கள் மக்கள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டியதே நம்முடைய நோக்கமாயிருக்க வேண்டும். தலைமுறை தலைமுறையாக வஞ்சிக்கும் இந்த மோசத்தை நிறுத்த, நடுவில் ஒரு கட்டை

போடவேண்டும். இதற்குச் சட்டம் வேண்டும். எல்லாரும் அபினி உபயோகிக்கிறார்களா? இல்லே. அதைப் போலவே மதுபானத்தையும் நிறுத்தலாம். ஒரு தரம் நிறுத்தி விட்டோமானல் பிறகு அது திரும்பி வராமல் பார்த்துக்கொள்ள முடியும்.

ஆக, நான் அனுபவ முறையில் அறிந்து, கொண்டது யாதெனில், 'உபதேசம் மட்டில் போதாது; புதிய ஆட்களை வலையில் போட்டுக்கொள்ள மதுபானக் கடைகளுக்கு இடம் கொடாமல் சட்டம் செய்துதான் தீரவேண்டும்' என்பதே.

இதன்மேல், லாபத்திற்காக விற்பதும், ஜனங்களை வாங்கச் செய்ய விளம்பரம் செய்வது மில்லாமல் சர்க்காரே மதுசார வஸ்துக்களை வைத்து மிதமாகக் கொடுத்து வரும் முறை சில தேசங்களில் நடந்துவருவதைப் பார்த்து ஆராய்ந்தேன். இவைகளில் ஏதோ கொஞ்சம் பயனுள்ள போதிலும், மதுபானக் கேட்டை யொழிக்கும் முறை காணப்படவில்லை.

கடைசியாய், பொதுஜன அபிப்பிராயம் சேர்பட்டுப் பூரண மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றி வைக்கு மளவு அச் சகாயத்தை ஏற்படுத்திக் கொண்டு அவ்வித சட்டத்தைச் செய்வது தான் வழியென்று நான் முடிவு செய்து கொண்டேன்.

அமெரிக்காவில் வாஷிங்டன் என்னும் ராஜதானியில், முதலில் சில நகரங்களின் வாசிகள் பூரண மதுவிலக்குச் சட்டத்திற்கு விரோதமாய் வாக்குக் கொடுத்தார்கள். ஆனல் கிராம வாசிகள் எல்லோரும் சட்டத்துக்கு ஆதரவு கொடுத்ததின் பேரில் சட்டம் ஏற்பட்டது. பிறகு சட்டத்தை மாற்றி மதுசாரம் அதிகமில்லாத ஒயின், பீர் இவைகளை விற்கலாம் என்று ஒரு முயற்சி நடந்தது. ஆனல் பூரண மதுவிலக்கினல் உண்டான செல்வப் பெருக்கை அனுபவத்தில் கண்டபின், 'அதே நகரவாசிகள் பூரண மதுவிலக்கே இருக்கவேண்டும் என்று வாக்குக்கொடுத்து, அதை மாற்றக்கூடாது என்று முடித்தார்கள்."

ஆசாரிய ப்ஹீஷருடைய புத்தகத்தை மதுவிலக்கு முறையில் சந்தேகங் கொண்டவர்கள் எல்லாரும் படித்தல் வேண்டும். நம்முடைய நாட்டுக்கும் அமெரிக்கா முதலிய மேல் நாடுகளுக்கும் இரு பெரும் வித்தியாசங்கள் உண்டு. ஒன்று அந்நாடுகளில் மிதமாக மதுபானஞ் செய்வதில் ஒரு விதமான அவமானமு மில்லை. வீடுகளிலேயே தாய் தந்தையர் மனைவி மக்களெல்லாரும் அறியப் பகிரங்கமாகக் குடிப்பார்கள். நாம் பாயஸம் பக்ஷணம் உண்ணுவதுபோல் அங்கே ஒயின், பீர், வுஸ்கிக்கு வீடுகளில் கௌரவமான ஸ்தானம் உண்டு. ஆகையால் அந்த தேசங்களில்

மதுவிலக்கு மிகக் கடினம். நம்முடைய நாட்டில் அவ்விதமில்லை. இது நமக்கு சாதகம்.

மற்றொரு வித்தியாசம் நமக்கு சாதக மன்று. மேல் நாட்டில் படிப்பு அதிக விருத்தியாகி யிருக்கிறது. அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். எவ்விஷயத்திலும் பிரசாரம் செய்வது எளிதாகும். வேரூன்றிக் கிடந்த வழக்கங்களையும் மாற்றும்படியான தீவிர பிரசாரம் அங்கே புத்தகங்களாலும், விளம்பரங்களாலும், பத்திரிகைகளாலும் செய்யலாம். பயன்படும். நம்முடைய நாட்டில் படிப்பென்பது நூற்றுக்கு ஒன்றுகூட இல்லை. கோடிக்கணக்கான ஜனங்களுக்கு எழுத்து வாசனையே யில்லை. இத் தொகையினர்களுக் கெல்லாம் எழுத்துக் கற்றுக் கொடுத்துப் பிறகு சீர்திருத்தம் செய்வது அசாத்தியம். மதுபானம் வேரூன்றாத காலத்திலேயே முன் னெச்சரிக்கையுடன் அதைத் தடுக்கும் முறை தேடாமல் விட்டோமானால், பிறகு இந்த வலையிலிருந்து தப்புவதற்கு வழியே இல்லாமல் போய்விடும். படிப்பு பரவின தேசங்களில் உள்ள அவகாசம் இந்த நாட்டில் கிடையாது. ஆகையால்தான் மதுபானத்திற்குப் பெருந் தொகையார் அடிமைகளாகப் போகு முன்னமேயே நாம் மது விலக்கு வேலை துவக்கவேண்டும். மேல் நாடுகளில் வேரூன்றின மாதிரி, இந் நாட்டில் மதுபானம் வேர் ஊன்றி விட்டால், பிறகு நமக்கு கதிமோக்ஷமே கிடையாது.

———



கேள்வி: குற்றம் செய்ததுண்டா?

பதில்: செய்ததுண்டு. ஆனால் என்னைக் குற்றம் செய்யப் பண்ணியது கள்ளு. அந்தக் கள்ளை நீங்கள் விற்கலாமா?

# இயந்திரத்தொழிலும் மதுபானமும்

முற்காலத்தில் எல்லா வேலைகளையும் கையினுலேயே செய்து கொண்டிருந்தோம். இந்நாளில் எல்லா வேலைகளுக்கும் இயந்திரங்கள் ஏற்பட்டு வருகின்றன. கை வேலையைவிட இயந்திர வேலையில் தொழிலாளிகளுக்கு அபாயம் அதிகம். இதன் காரணங்கள் இரண்டு: இயந்திரக் கருவிகள் அதிதுரிதமாய் ஓடுவது ஒரு காரணம்; இயந்திர வேலையில் ஏராளமான தொழிலாளிகள் ஓரிடத்தில் சேர்வதால் ஒருவனுடைய அசாக்கிரதை மற்றவர்களைப் பாதிக்கும் என்பது இரண்டாவது காரணம்.

இயந்திரத் தொழிலில் விபத்துகள் நேரிடாமல் தடுப்பதற்கு இரு வகை உபாயங்களைக் கையாளுகிருர்கள். (1) அபாயங்களை விலக்கும் இயந்திர சாதனங்கள்; (2) தொழிலாளிகளுக்கு அதிக ஜாக்கிரதை யுடன் இருக்கும்படி கற்பித்தல்.

ஆனல் அபாயங்களைத் தடுப்பதற்கு எவ்வளவுதான் இயந்திரப் பாதுகாப்புகளும், விதிமுறைகளும் ஏற்படுத்தியிருந்த போதிலும் தொழிலாளிகள் அந்த விதி முறைகளுக்குக் கீழ்ப்படிந்து நடவாவிட்டால் ஒன்றும் பயன்படாது. இதற்குத் தொழிலாளிகள் எப்போதும் தெளிவான மூளை யுடன் இருத்தல் அவசியம். எந்த நேரத்திலும் தங்கள் அறிவைப் பயன் படுத்திச் சிந்தித்து அபாயங்களை விலக்கிக்கொள்ள அவர்கள் சித்தமா யிருக்கவேண்டும்.

இதிலிருந்து மதுபானத்தினுல் இயந்திரத் தொழிலின் அபாயங்கள் மிகுதியாகு மென்பதை நன்கறியலாம். கள்ளு, சாராயம், பீர், ஒயின் முதலிய எல்லாவகைக் குடிகளுக்கும் இது பொருந்தும். இந்தக் குடி வகைகளிலுள்ள மதுசாரம் (1) தொழிலாளியின் மதியை மழுங்கச்செய்து விடுகிறது. இதனுல் அவன் அஜாக்கிரதை யுள்ளவனுகிருன். மனம் தெளிவா யிருக்கும்போது செய்யத் துணியாத அபாயமான காரியங்களை இந்நிலையில் அவன் செய்வான். (2) அபாயம் எதிர்ப்படும்போது அதை உடனே உணர்வதற்கு வேண்டிய புத்தி கூர்மையை அவன் இழந்துவிடுகிருன். (3) அவசரமான சந்தர்ப்பங்களில் துரிதமாகச் சிந்தித்து அபாயங்களைத் தடுப்பதற்குரிய உபாயத்தைக் கையாள அவனுல் முடியாமற் போகிறது. (4) அபாயமுள்ள இடங்களில் தன்னை ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துக் கொள்ளும் சக்தி குறைந்து விடுகிறது.

ஏராளமாய்க் குடித்துப் போதை கொண்டிருந்தால் தான் இத்தகைய அபாயங்கள் நேரிடு மென்பதில்லை. மிதமாய்க் குடிப்பதினால் உண்டாகும் சொற்ப மூளைக் குழப்பமே அபாயம் விளைவிப்பதற்குப் போதுமானது. உண்மையில் முழுக்குடியை விட அரைக்குடி, கால் குடியே அபாயங்களுக்கு அதிகம் காரணமாகின்றன. முழுக் குடிகாரனைப் பார்த்தவுடன் தெரிந்துகொள்ளலாம். அந்நிலைமையில் அவனை அபாயமான இயந்திரங்களுக் கிடையே வேலைசெய்ய யாரும் அநுமதிக்க மாட்டார்கள். வெளிப் பார்வைக்குக் குடித்தவர்கள் என்று காணப் படாத மிதக் குடியர்களால்தான் அபாயங்கள் உண்டாகின்றன. பிறகு விசாரணையில் இந்த உண்மை வெளிப்படுவதுமில்லை.

லீப்ஸிக் என்னும் நகரில் நோய்ப்படும் தொழிலாளிகளுக்கு உபகாரம் செய்வதற்கென்று ஒரு சங்கம் இருக்கிறது. இச் சங்கத்தார் சில காலத்திற்குமுன் குடிகாரர்களிடையேயும், மற்றவர்களிடையேயும் ஏற்படும் நோய்கள், அபாயங்கள் முதலியவைகளைக் குறித்து மிக நுட்பமாக ஆராய்ச்சி நடத்தினார்கள். அவர்கள் ஆயிரம் தொழிலாளிகளை எடுத்துக் கொண்டு, அவர்களில், நாலு வாரத்திற்குள் குணமாகக் கூடிய சொற்ப காயங்கள் எத்தனை பேருக்கு ஏற்பட்டனவென்று கணக்கிட்டார்கள். குடியாதவர்களுக்கு 100 காயங்கள் ஏற்பட்டால், குடிப்பவர்களுக்கு 320 காயம் ஏற்பட்டதாகத் தெரிய வந்தது.

பின்னர், அச்சங்கத்தார், குணமாவதற்கு நாலுவாரத்திற்கு மேல் ஆகக்கூடிய அபாயமான காயங்கள் எத்தனை பேருக்கு ஏற்பட்டன வென்று கணக்கெடுத்தார்கள். ஆயிரம் தொழிலாளிகளில் மொத்தம் 76 பேருக்கு இத்தகைய பெருங்காயங்கள் ஏற்பட்டிருந்ததில்,குடியாதவர்கள் 19 பேர் ; குடிப் பழக்கமுள்ளவர்கள் 57 பேர். ஆகவே குடியினால் இயந்திரசாலை அபாயங்கள் மூன்று பங்கு அதிகமாகின்றன வென்று தெரியவந்தது.

சார்லஸ் ரெயிடல் என்னும் பௌதிகப் புலவர் கூறுவதாவது :—
"மனித உயிரும், விலையுயர்ந்த இயந்திரங்களும், அவற்றைத் திறம்பட இயக்கும் ஆற்றலும் மிக அருமையான பொருள்களாகும். மது சாரத்தினால் குழம்பியுள்ள மூளையைக் கொண்டவர்களிடம் அவற்றை ஒப்படைக்கக் கூடாது. தற்காலத் தொழில் முறையில் தொழிலாளிகள் தெளிவுள்ள மூளை பெற்றிருத்தல் எவ்வளவு அவசியம் என்பதை எண்ணிப் பார்க்குங்கால், இயந்திர அபிவிருத்தியும் குடியும் ஒன்றுக்கொன்று முற்றும் மாறுபட்டவை என்பது நன்கு புலனாகும்."

ஆகவே, நூறு வருஷங்களுக்கு முன்பிருந்ததைவிட இன்றைய தினம் குடியினால் தொழிலாளிகளுக்கு அபாயம் அதிகம் என்று ஏற்படுகிறது. இயந்திரங்கள் மனிதனுக்குப் பேருதவி செய்யும். ஆனால் அந்த இயந்திரங்களை ஓட்டுவதற்குத் தெளிவான மூளையும், படபடப்பில்லாத நிதான புத்தியும் நரம்புகளைக் கட்டுப்படுத்தும் சக்தியும் வேண்டும். மதுசாரம் இவற்றிற்கெல்லாம் பகையாகும்.

மேற்கூறிய சங்கத்தார் இன்னும் சிலவகை ஆராய்ச்சி நடத்தினார்கள். காயமடைந்தவர்களில் குடிப்பவர்களுக்கும், குடியாதவர்களுக்கும் ஒரே விதமான சிகிச்சை செய்தால் யார் விரைவில் குணமடைகிறார்கள் என்று அவர்கள் சோதனை செய்தார்கள். குடிப்பவர்கள் குணமடைவதற்கே அதிக காலம் ஆவதாகத் தெரியவந்தது. மதுபானம் செய்யாதவர்கள் குணமடைவதற்கு எவ்வளவு நாளாயிற்றோ அதுபோல் $3\frac{3}{4}$ மடங்கு அதிக நாள் குடிகாரர்கள் குணமடைவதற்கு ஆயிற்று. அதாவது குடிப் பழக்கமில்லாதவர்கள் வைத்திய சிகிச்சையில் 100 தினங்கள் இழந்தார்களென்றால், குடிகாரர்கள் 372 நாள் நஷ்டமடைந்தார்கள். தொழிலாளிகளுக்கு மதுபானத்தால் பல விதங்களில் நஷ்டம்.

அமெரிக்காவில் போஸ்டன் நகரிலுள்ள பெரிய வைத்தியசாலையில், விபத்துகளினால் காயமடைந்தவர்களின் சிகிச்சைப் பகுதிக்கு டாக்டர் பிரிக்ளி என்பவர் தலைவராயிருந்தார். இவ்வாறு காயமடைந்தவர்கள் 40,000 பேர் வருஷந்தோறும் மேற்படி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். இந்த விபத்துகளில் பலவற்றிற்கு மதுசாரமே காரணமென்றும், காயமடைந்தவர்கள் குடிகாரர்களா யிருந்தால் அவர்களுடைய காயங்கள் ஆறுவதற்கு அதிக காலம் பிடிக்கிறதென்றும் டாக்டர் பிரிக்ளி தம் அநுபவத்தில் கண்டறிந்து கூறியிருக்கிறார். "ஒடிந்த எலும்பு சேர்வதற்கும், காயம் ஆறுவதற்கும் மதுசாரம் பெரிய தடையாயிருக்கிறது" என்று அவர் சொல்கிறார். மதுசாரம் உடலிலுள்ள உயிர் அணுக்கள், தசை நார்கள் இவைகளைப் பலவீனப்படுத்தி விடுகிறது. எனவே, குடிகாரர்களுக்குக் காயமேற்பட்டால் எலும்பு சேர்வதும், புண் ஆறுவதும் மிகவும் தாமதப்படுகின்றன.

# குடியினால் மரணம் அதிகம்

குடியாதவர்களை விடக் குடிகாரர்கள் அதிக விபத்துகளுக்குள்ளாகிறார்கள் என்றும், குடிகாரர்களின் காயங்கள் ஆறுவதற்கு அதிக காலம் ஆகிறதென்றும் மேலே கூறினோம். இவைமட்டுமல்ல; காயங்களினால் ஏற்படும் மரணங்களும் குடிகாரர்களுக்குத்தான் அதிகம்.

மதுபானம் செய்யாதவர்களுக்குள் காயம் குணமேயாகாமல் ஒருவன் இறந்தால், மதுபானம் செய்வோரில் நாலு பேர் சாகிறார்கள். இந்த அதிகப்படி மரண விகிதத்தின் காரணங்களை டாக்டர் பிரிக்ளி பின்வருமாறு விளக்கியுள்ளார்:

"மது மயக்கத்தில் இருக்கும்போது ஒருவனுக்குச் சிலவகைக் காயங்கள் ஏற்பட்டால், மயக்கம் தீரும் வரையில் அக்காயங்களின் இயல்பை வைத்தியர்கள் உள்ளபடி அறிந்துகொள்ளுதல் இயலாத காரியம். உதாரணமாக, ஒருவனுக்கு மண்டை உடைந்துபோனால், அவன் போதைகொண்டிருக்கும் வரையில் மண்டை எந்த இடத்தில் உடைந்திருக்கிறதென்றாவது, எவ்வளவு உடைந்திருக்கிறதென்றாவது தெரிந்துகொள்ள முடியாது. இதுபோலவே, ஒருவனுக்கு அடிவயிற்றில் ஏதேனும் காயங்கள் ஏற்பட்டிருந்தாலும், அல்லது ஒருவன் விஷம் அருந்தி யிருந்தாலும் மதுமயக்கமிருக்கும்போது கண்டுபிடிக்க முடியாது. மது சாரம் நோயின் இயல்பை நன்கு தெரிந்துகொள்ள முடியாமல் செய்வதால், சரியான சிகிச்சை செய்வதையும் தடை செய்கிறது. இதனால் ஏற்படும் தாமதம் உயிருக்கே அபாயமாகக்கூடும். பின்னால் மயக்கம் தீரும்போது நோயின் இயல்பை அறிந்தாலும், காலம் தவறி விட்டபடியால் அப்போது சிகிச்சை பயனற்ற தாகலாம்.

"சஸ்திர சிகிச்சையினால் ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ளும் சக்தி மதுபானத்தினால் குறைவாகும். இக்காரணத்தினால் உடனே செய்யவேண்டிய சஸ்திர சிகிச்சையைக் குடிகாரர்கள் விஷயத்தில் பொறுத்துச் செய்யவேண்டி யிருக்கிறது. இந்தத் தாமதம் தீமையாய் முடியலாம்.

"குடிகாரன் ஒருவனுக்கும், குடியாதவன் ஒருவனுக்கும் ஒரே விதமான காயம் ஏற்பட்டால் குடியாதவன்தான் அதிக காலம் பிழைத்திருப்பான். ஏனெனில் குடிகாரனிடம் ஜீவ சக்தி குறைவாயிருக்கும்."

காயங்களின் சிகிச்சையில் குடியினால் ஏற்படும் பிரதிகூலங்களை டாக்டர் பிரிக்ளி பின்வருமாறு சுருக்கமாய் எடுத்துக் காட்டுகிறார்:

(1) மது சாரம் நோயின் இயல்பை அறிதல் கஷ்டமாகச்செய்கிறது.

(2) காயத்தின்மூலம் இரத்தத்தில் விஷக்கிருமிகள் சேருவது எளிதாகச் செய்கிறது.

(3) காலத்தில் சரியான சிகிச்சை செய்ய முடியாமல் தடுக்கிறது.

(4) காயம் குணமடைவதில் தாமதம் ஏற்படுத்துகிறது.

(5) முடிவில், சிகிச்சையினால் தக்க பலன் விளைவதில்லை.

(6) காயங்களினால் மரணமடைவோர் குடிகாரர்களுக்குள்ளேதான் அதிகம்.

---

# மிதமாகக் குடிப்பவன் கதி



# பாங்கர் விநாயக ராவ்

## ஒரு நாடகம்

[ரா-கி]

---

### முதற் காட்சி

[நேரம்: காலை 9 மணி.

இடம்: மயிலாப்பூர், "பத்ம விலாசம்" பங்களாவில் முன் புறத்து ஹால்.

பாத்திரங்கள்: விநாயக ராவ், எம். எல். ஸி., ஷை யார் மகன் கங்காதரன்; யுவர் சங்கத் தொண்டர்கள்.]

தொண்டர்கள்: நமஸ்காரம், நமஸ்காரம்.

விநாயக ராவ்: வாருங்கள்; உட்காருங்கள்.

[உட்காருகிறார்கள்.]

விநாயக ராவ்: நீங்கள் யார், எதற்காக வந்தீர்கள், தெரியவில்லையே?

முதல் தொண்டர்: நாங்கள் யுவச் சங்கத் தொண்டர்கள். அடுத்த வாரம் சட்ட சபையில் பூரண மதுவிலக்குப் பிரேரபணை வரப் போகிறதல்லவா? அதைத் தாங்கள் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள வந்தோம்.

இரண்டாம் தொண்டர்: வேறொரு வேண்டுகோளு மிருக்கிறது. தயவு செய்து தங்கள் தென்னை மரங்களைக் கள்ளுக்கு விடக்கூடாது.

முதல் தொண்டர்: சட்ட சபையில் தாங்கள் நியமன அங்கத்தினர் என்பது எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் தங்களுடைய வாக்களிக்கும் சுதந்திரத்தை யாரும் மறுக்க முடியாது.

விநாயக ராவ்: ஏழைகள் விஷயத்தில் நீங்கள் இவ்வளவு சிரமப்படுவது குறித்து சந்தோஷம். நானும் என் கடமையைச் செய்வேனென்று நீங்கள் நம்பி யிருக்கலாம்.

தொண்டர்கள்: நமஸ்காரம், போய் வருகிறோம்.

[போகிறார்கள்.]

விநாயக ராவ்: முன்னுக்கு வரக்கூடிய பிள்ளைகள் இப்படிக் கெட்டுப்போகிறார்கள்.........ஓஹோ! மணி பத்தாகிவிட்டது.

[எழுந்து உள்ளே செல்கிறார்.]

---

## இரண்டாம் காட்சி

[நேரம்: மாலை 3 மணி.

இடம்: "மகாராஜா ஹொடேல்"லில் ஓர் அறை.

பாத்திரங்கள்: விசுவநாதன்; அப்பாசாமி; பதுமநாபன்; அனந்தகிருஷ்ணன்; ராமநாதன்; கங்காதரன்.]

பதுமநாபன் (மோட்டார் சத்தம் கேட்டு): அடே விசுவம்! பேபி* வருகிறது.

விசுவநாதன்: பொஸொட்டோ†வுக்குப் போய் அங்கிருந்து சினிமா போகலாம்.

[வாசலில் மோட்டார் வந்து நிற்கிறது. கங்காதரனும் ராமநாதனும் இறங்கி உள்ளே வருகிறார்கள்.]

அனந்தகிருஷ்ணன்: அடே, ராமநாதன் கூடவா? இவனை எங்கே பிடித்தாய்?

கங்காதரன்: வழியில் அகப்பட்டான். பிடித்து வந்தேன்.

ராமநாதன்: உளறாதே! நானல்லவா உன்னைப் பிடித்தேன்?

பதும (கையைத்தட்டி): அடே, பையா! இரண்டு டிபன் கொண்டு வா!

அனந்த: ஏன்? எல்லாருக்கும் கொண்டு வரச் சொல்லேன்? இன்னொரு முறைதான் சாப்பிடுவோமே?

விசுவ: சை! சை! பொஸொட்டோவுக்குப் போகவேண்டும். மறந்துவிடாதே.

ராய: பாவிப் பசங்களே! புதுச்சேரிக்குப் போனீர்களாமே?

அனந்த: பாவியாவது? நீதான் கொடுத்து வையாத பாவி!

[சிற்றுண்டி வருகிறது. சாப்பிடத் தொடங்குகிறார்கள்.]

அப்பா: பட்டணத்தில் ஒன்பது ரூபாய்க்கு விற்கும் சாம்பேன்‡ அங்கே மூன்று ரூபாய். எவ்வளவு வித்தியாசம் பார்!

---

* "பேபி ஆஸ்டின்" என்னும் சிறு மோட்டார் வண்டி.

† சென்னையில் பிரபல ஐரோப்பிய ஹொடேல்.

‡ ஒருவகை சீமை மது.

ராம : உண்மையாகவே நீங்கள் குடித்ததாகவா சொல்கிறீர்கள்? என்ன துணிச்சல் உங்களுக்கு?

அனந்த : சுகமநுபவிக்கப் பிறந்தவர்கள் வெள்ளைக்காரர்கள் தானப்பா!

ராம : கங்காதரன் துணிந்ததல்லவா எல்லாவற்றையும் விட ஆச்சரியம்?

கங்கா : எனக்கென்னவோ இன்னும் சந்தேகமாய்த்தானிருக்கிறது. நாம் அவ்வளவு தூரத்துக்குப் போவது சரியல்ல வென்று நினைக்கிறேன்.

விசுவ : நீ இப்படித்தான் சொல்லிக்கொண்டிருப்பாய். காரியத்தில் ஒன்றும் குறைவில்லை.

கங்கா : ஒரு சமாசாரம். இன்று எங்கள் வீட்டுக்கு யூத் லீக்* தொண்டர் இருவர் வந்தார்கள். சட்ட சபையில் வரப்போகும் மதுவிலக்குப் பிரேரேபணைக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள. அவர்களை லா காலேஜில் பார்த்த ஞாபக மிருக்கிறது.

பதும : எனக்குத் தெரியும் அவர்களை, கதர்ப் பித்தர்கள்.

ராம : ரொம்ப சரி. ஒரு சிகரெட் கொடு.

பதும : அதுதான் கிடையாது. வாங்கவேண்டும்.

விசுவ : வழியில் வாங்கிக்கொள்ளலாம். கிளம்புங்கள்.

கங்கா : எங்கே போவதாக உத்தேசம்?

விசுவ : முன்னமே சொன்னேனே? சினிமாவுக்கு—வழியில் பொஸொட்டோவில் இறங்கிவிட்டு.

கங்கா : எனக்குப் பிடிக்கவில்லை.

ராம : எனக்கும் பிடிக்கவில்லை.

பதும : சை! சை! ராமு! உனக்காகத்தானே முக்கியமாய்ப் போகவேண்டு மென்பது?

கங்கா : வோட்டு எடுத்து விடலாம்.

விசுவம் : நல்ல யோசனை. பொஸொட்டோவுக்குச் சாதகமானவர்களெல்லாம் கை தூக்குங்கள்.

[கங்காதரனைத் தவிர மற்றவர்கள் கை தூக்குகிறார்கள்.]

கங்கா : பெரும்பான்மையோர் வாக்கின்படி நடக்க நான் கடமைப்பட்டவன்.

அப்பா : மாட்டேனென்றால் யார் விடுகிறார்கள்?

[எழுந்து வெளியே போகின்றனர்.]

---

* யுவர் சங்கம்.

## மூன்றும் காட்சி

[நேரம் : காலை ஏழு மணி.

இடம் : "பத்ம விலாசம்", கொல்லைப்புறம்.

பாத்திரங்கள் : விநாயக ராவின் மனைவி சிவகாமியம்மாள் ; வேலைக்காரி தாயி.]

சிவகாமி : ஏண்டி, தாயி ! நேற்று ஏன் வரவில்லை ? உன் மகளை அனுப்பினுயே ? அவளால் என்ன வேலை செய்ய முடிந்தது ? இப்படிப் பண்ணினுல் உன்னைத் தள்ளிவிடுவேன்.

தாயி (கண்ணில் நீர் ததும்ப): அப்படிச் செய்யக் கூடாது, அம்மா ! காப்பாற்ற வேண்டும். புருஷன் சண்டைபோட்டு அடித்துவிட்டார். நேற்றெல்லாம் எழுந்திருக்கவே முடியவில்லை.

சிவகாமி : ஐயோ ! உன் புருஷன் அவ்வளவு பொல்லாதவனு ? ஐயா கிட்ட சொல்லிப் போலீஸில் எழுதி வைக்கச் சொல்லட்டுமா ?

தாயி : அவர் நல்லவரம்மா ! பாழுங் கள்ளு அப்படிப் பண்ணுகிறது. முந்தாநாள் சம்பளம் கொடுத்தாங்க. குடித்துவிட்டு வந்துவிட்டார்.

சிவகாமி : சம்பளம் எவ்வளவு ?

தாயி : பஞ்சு ஸ்கூலில் மாதம் 22 ரூபாய் சம்பளம். சௌக்கியமாயிருக்கலாம். ஆனுல் சம்பளத்தில் முக்கால்வாசி குடிக்குப் போகிறது. ஆறு ஏழு ரூபாய் கூட இட்டேறுவதில்லை.

சிவகாமி : நல்லவன் என்று சொல்கிருயே ? நீ சொல்லிக் குடிக்காமல் செய்யக்கூடாதா ?

தாயி : எவ்வளவோ செய்து பார்த்துவிட்டேன். நல்ல புத்தியாயிருக்கும்போது குடிப்பதே யில்லை யென்று சொல்வார். சாமியை வைத்துக்கூட சத்தியம் செய்திருக்கிருர். ஆனுல் ஆலையிலிருந்து எந்தப் பாதையாக வந்தாலும் வழியில் பாழுங் கடை ஒன்று.

சிவகாமி : இந்தக் கடைகளை ஏன்தான் வைத்திருக்கிருர்களோ, தெரியவில்லை.

தாயி : காந்தி வந்து கள்ளு சாராயக் கடைகளை மூடப்போகிருர் என்று முன்னே சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒன்றையுங் காணேம்.

சிவகாமி: சரி, காப்பிக்கு நேரமாய்விட்டது. சீக்கிரம் காரியத்தைப் பார்.

[உள்ளே போகிருள்.]

## நான்காம் காட்சி

[நேரம்: இரவு ஒன்பது மணி.

இடம்: "பத்ம விலாசம்" தோட்டத்தில் சலவைக்கல் மேடை.

பாத்திரங்கள்: விநாயக ராவ்; சிவகாமி அம்மாள்; கங்கா தான்; மாப்பிள்ளை பரமேசுவரன்.]

பரமேசுவரன்: நாளைச் சட்ட சபையில் பிரேரேபணை வரப்போகிற தல்லவா? நீங்கள் எப்படி வாக்களிக்கப் போகிறீர்கள்?

விநாயக: நான்தான் அரசாங்கக் கட்சி யாயிற்றே?

பரமே: அதற்காக மனச் சாட்சியை அடியோடு விற்றுவிடலாமா?

விநாயக: ரொம்பத் தெரிந்தவன்போல் பேசுகிறாய். உண்மையில், இந்த விஷயத்தில் அரசாங்கக் கொள்கைதான் சரி யென்பது என் கருத்து. நீங்கள் யோசனையே செய்யாமல் பிறர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு குதிக்கிறீர்கள்.

சிவகாமி: என்ன சண்டை? எனக்கும் சொல்லுங்களேன்.

கங்கா: கள்ளு, சாராயக் கடைகளை யெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று நாளை சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவரப் போகிறார்கள். அப்பா அதற்கு விரோதமாக வோட்டுக் கொடுக்கப் போகிறாராம். இதற்காக மாப்பிள்ளை சண்டை பிடிக்கிறார்.

சிவகாமி: அந்த எழவு கடைகள் என்னத்திற்காக? நான் மாப்பிள்ளை கட்சிதான்.

விநாயக: நீ கலால் மந்திரியாகும்போது அப்படியே செய்யலாம்.

பரமே: சந்தேகமென்ன? சட்ட சபையில் ஸ்திரீகள் மட்டும் பெரும்பான்மையோரா யிருந்தால் இன்னும் எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்திருப்பார்கள்.

சிவகாமி: இன்று காலையில் வேலைக்காரி சொன்னாள். எனக்குப் பரிதாபமா யிருந்தது. அவள் புருஷனுக்கு 25 ரூபாய் ஆலையில் சம்பளமாம். முக்கால்வாசிக்கு மேல் குடியில் தொலைத்து விடுகிறானாம். வீட்டில் பெண்டாட்டி பிள்ளைகளைப் போட்டு அடிக்கிறானாம். ஏழைகள் ஏன் இப்படி அவதிப்படவேண்டும்?

விநாயக: ஏன? எல்லாம் நீ சுகமாகக் கை கால் அசக்காமல் உட்கார்ந்து சாப்பிடுவதற்கும், உன் மாப்பிள்ளை என்ஜினியருக்குப் படித்து

உத்தியோகம் பெறுவதற்கும், கங்காதரன் மோட்டாரில் சவாரி செய்வதற்கும்தான்.

சிவகாமி : ஏதாவது தத்துப் பித்தென்று பேசாதீர்கள். அதற்கும் இதற்கும் என்ன வந்தது ?

விநாயக : கள்ளுக் கடைக்குச் சென்று குடிக்கத்தான் வேண்டுமென்று சர்க்கார் ஜனங்களைக் கட்டாயப்படுத்துகிறார்களா ?

கங்கா : கள்ளுக் கடையை வைத்துக்கொண்டு குடிக்காதே யென்று சொன்னால் என்ன பிரயோஜனம் ?

பரமே : விளக்கில் வந்து விழுந்து சாகும்படி விட்டில் பூச்சிகளை யாராவது கட்டாயப்படுத்துகிறார்களா ?

விநாயக : நீங்கள் உலகமறியாதவர்கள். ஆலையில் வேலை செய்வதும், கக்கூசு வாருவதும் எவ்வளவு கஷ்டமான வேலைகள் தெரியுமா ? இத்தகைய வேலை செய்பவர்களுக்கு வாழ்க்கையில் ஏதேனும் சந்தோஷம் வேண்டாமா ? குடி ஒன்றுதான் இருக்கிறது. அதையும் நீங்கள் ஒழித்துவிடச் சொல்கிறீர்கள்.

பரமே : குடியினால் உடம்புக்குக் கெடுதல் என்று எத்தனையோ வைத்தியர்கள் சொல்லி யிருக்கிறார்களே ?

விநாயக : வைத்தியர்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்வார்கள். கள்ளு உடம்புக்கு ரொம்பக் குளிர்ச்சி யென்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சிவகாமி : எப்படி யிருந்தாலும் ஏழைகள் பணமெல்லாம் கள்ளுக் கடைக்குப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டாமா ?

விநாயக : பத்துப் பாத்திரம் தேய்க்கவும், வீடுவாசல் பெருக்கி மெழுகவும் நீ தயாரா யிருக்கிறாயா, சொல்.

சிவகாமி : எனக்கேன் தலையிலெழுத்து ? ஏதாவது கேட்டால் ஏதாவது சொல்கிறீர்களே ?

விநாயக : அவசரப்படாதே ! உன் பெண்ணாவது நாட்டுப் பெண்ணாவது அந்த வேலைகள் செய்யத் தயாரா ?

சிவகாமி : ஒரு நாளும் செய்யமாட்டார்கள்.

விநாயக : வேலைக்காரி உங்களுக்கு அவசியம் வேண்டுமல்லவா ?

சிவகாமி : ஆமாம்.

விநாயக : சரி. உன் வேலைக்காரி புருஷன் வாங்கும் சம்பளம் ரூபாய் இருபத்தைந்தையும் வீட்டுக்குக் கொண்டுவந்தால், அவள் ஏன்

நரை ரூபாய் சம்பளத்துக்கு உனக்கு வேலை செய்ய வருவாளா? யோசித்துப் பார்.

சிவகாமி : ஏன் வரமாட்டாள்?

விநாயக : ஏன? அந்த இருபத்தைந்து ரூபாயைக் கொண்டு அவர்கள் சௌக்கியமாகக் காலட்சேபம் செய்வார்கள். புருஷன் அவளை வேலைக்கனுப்ப மாட்டான். அப்படி அவள் வந்தாலும் பணிந்து வேலை செய்யமாட்டாள். ஒரு வார்த்தை அதட்டிப் பேசினுல் "போ, அம்மா, போ" என்று சொல்லிவிட்டுப் போய்விடுவாள்.

பரமே : அது உண்மைதான். நமக்கு அவசியமானுல் அதிகச் சம்பளம் கொடுத்துத்தான் வைத்துக்கொள்ளவேண்டும்.

விநாயக : இப்பொழுதே நமது கிராமத்தில் பண்ணையாட்கள் சொன்னபடி கேட்பதில்லை யென்று காரியஸ்தர் எழுதுகிறுர். கள்ளுக் கடையும் இல்லாவிட்டால் என்ன ஆகும் தெரியுமா? இருக்கட்டும். நீ என்ஜினியரிங் காலேஜுக்குச் சம்பளம் என்ன கொடுக்கிறுய்?

பரமே : 140 ரூபாய்.

விநாயக : கங்காதரன் லா காலேஜுக்கு 180 ரூபாய் சம்பளம் கொடுக்கிறுன். ஆனுல் உங்களுடைய படிப்புக்காக மொத்தம் எவ்வளவு செலவு ஆகிறது தெரியுமா? நீங்கள் கொடுக்கும் சம்பளத்தைப்போல் குறைந்தது ஐந்து மடங்கு செலவாகிறது. சமீபத்தில் முத்துக்கருப்பஞ் செட்டியார் சர்வ கலாசாலைக்காகக் கணக்குப் பார்த்தார்கள். மொத்தம் வருஷத்தில் ஐந்து லட்சம் ரூபாய் செலவாகு மென்றும், அதில் ஒரு லட்சம் ரூபாய் கூட மாணுக்கர் சம்பளத்தில் கிடைக்காதென்றும் ஏற்பட்டன. இதற்குத்தான் கள் வருமானம் வேண்டும்.

பரமே : இது அதர்ம மல்லவா? ஒரு சிலர் படித்து ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம் வாங்குவதற்காக எத்தனையோ ஏழைகள் கண்ணீர் விட வேண்டுமோ?

விநாயக : அதற்கென்ன செய்வது? ஹிம்சைதான் இயற்கை தருமம். புழு பூச்சிகளைத் தின்று பட்சிகள் உயிர் வாழ்கின்றன. பட்சிகளைத் தின்று மிருகங்கள் பிழைக்கின்றன. மிருகங்களைக் கொன்று தின்றும், வேலை வாங்கியும் மனிதன் ஜீவிக்கிறுன். மனிதர்களுக்குள்ளே ஏழைகளை வேலை வாங்கிப் பணக்காரர்கள் வாழ்கிறுர்கள். எல்லாவற்றையும் துறந்து சந்நியாசியாய்ப் போவதா யிருந்தால் ஒன்றும் வேண்டியதில்லை. உலகத்தில் வாழ்வதா யிருந்தால் பிறருக்குத் துன்பங்கொடுத்தே யாகவேண்டும்.

சிவகாமி : எல்லாம் அவரவர் தலை யெழுத்தின்படிதான் நடக்கும் போலிருக்கிறது.

பரமே : தலையாவது ? எழுத்தாவது ? எல்லாம் மனிதன் செய்வது தான். கள்ளுக் கடைப் பணம்தான் கல்விக்கு என்பது ஏன் ? மற்றும் எத்தனையோ செலவுகளைக் குறைக்கக் கூடாதா ?

விநாயக : அதுதான் முடியாத காரியம். அரசாங்கத்தார் இராணுவச் செலவைக் குறைக்கமாட்டார்கள். உத்தியோகஸ்தர் சம்பளத்தையும் குறைக்க முடியாது. பாக்கி யெல்லாம் போகட்டும். தென்னை மரம் கள்ளுக் குத்தகையில் நமக்கு சராசரி மாதம் 800 ரூபாய் வருகிறது. ஒரு சிரமங் கிடையாது. இந்த வருமானத்தை நான் எப்படி விட முடியும் ? வேறு யார்தான் விடுவார்கள் ?

சிவகாமி : ஏழைகளின் பாவம் வீண் போகாது.

[எழுந்து போகிறார்கள்.]

---

## ஐந்தாம் காட்சி

[நேரம் : இரவு $8\frac{1}{2}$ மணி.

இடம் : "பத்ம விலாசம்", முன்புறத்து ஹால்.

பாத்திரங்கள் : விநாயக ராவ், சிவகாமி, பரமேசுவரன்.]

பரமேசுவரன் : சட்ட சபையில் முடிவு என்னவாயிற்று ?

விநாயக ராவ் : சரியான முடிவுதான்.

பரமே : பிரேரேபணை தோல்வி யடைந்ததல்லவா ?

விநாயக : முதல் தரமான தோல்வி, மூன்றில் ஒரு பங்கு வோட்டு கூடக் கிடைக்கவில்லை.

பரமே : இந்த அநியாயத்துக்கு எப்போது விமோசனமோ தெரியவில்லை.

சிவகாமி : சாப்பிடப் போகலாமா ? கங்கு இன்னும் வரக் காணோமே ?

விநாயக : ஏன் இவ்வளவு தாமதம் ? சினிமாவுக்குப் போயிருந்தாலும் இதற்குள் திரும்பி யிருக்கலாமே ?

பரமே : மோட்டார் சத்தம் கேட்கிறது. நான் போய்ப் பார்த்து வருகிறேன்.

[வெளியே போகிறான்.]

சிவகாமி (இரகசியமாக) : ஒரு சமாசாரம் அல்லவா ? ரொம்பக் கவலையா யிருக்கிறது. கொஞ்ச நாளாய்க் கங்கு ஒரு மாதிரியா யிருக்கிறான்.

விநாயக : என்ன சொல்கிறாய் ? கங்குவுக்கென்ன ?

சிவகாமி : நாட்டுப் பெண் இன்றுதான் சந்தேகப்பட்டுச் சொன்னாள். அதன்மேல் எனக்கும் சந்தேகமா யிருக்கிறது. இரவில் முன்போல் சீக்கிரம் வருவதில்லை. வாயில் துர்வாசனை யென்று சொல்கிறாள்.

விநாயக : சீச்சீ ! என்ன உளறுகிறாய் ? கங்காதரனா அப்படியெல்லாம் போகிறவன் ?

சிவகாமி : ஒன்றுமில்லாம லிருக்கவேண்டு மென்றுதான் தெய்வங்களை வேண்டிக்கொண்டிருக்கிறேன். ஆனாலும் மனக்கலக்கமா யிருக்கிறது. வெள்ளைக்கார ஓட்டல்கள் இருக்காமே ? அங்கே போகிறானோ வென்று தோன்றுகிறது. சேர்வாரோடு சேர்ந்து எத்தனையோ பிள்ளைகள் கெட்டுப்போகிறார்களே ?

[பரமேசுவரன் உள்ளே வருகிறான்.]

பரமே : வேறு யாருடைய வண்டியோ போயிற்று. கங்காதரனைக் காணோம்.

[டெலிபோனில் மணி அடிக்கிறது.]

விநாயக : அது யார், பாரப்பா.

பரமே (டெலிபோனில்) : யார் ?—போலீஸ் ஸ்டேஷனா ?—ஆமாம்.—துக்க சமாசாரமா ? என்ன ? என்ன ?—(அரை நிமிஷங் கழித்துத் திரும்பி) ஐயோ ! மோட்டார் விபத்தாம். கங்காதரனை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோ யிருக்கிறார்களாம். படுகாயமாம்.

சிவகாமி : அட பாவி ! மோசம் செய்துவிட்டாயா ? ஐயோ ! என்ன செய்வேன் ?

விநாயக ராவ் (பதைபதைப்புடன்) : ஓடு ! ஓடு ! டிரைவரைக் கூப்பிட்டு மோட்டார் கொண்டுவரச் சொல்லு. (டெலிபோன் அருகில் சென்று) ஹலோ ! யார் அங்கே ? விபத்து எப்படி ஏற்பட்டது தெரியுமா ?

டெலிபோனில் : ராயரிடம் சொல்ல வேண்டாம். நன்றாய்க் குடித்திருந்தா னென்று போலீஸ் சார்ஜெண்டு சொல்கிறார்.

விநாயக : என்ன? நம்முடைய டிரைவரா குடித்துவிட்டிருந்தான்?

டெலிபோனில் : டிரைவர் அல்ல. ராயர் மகனே வண்டி ஓட்டினானாம். குடிவெறியில் எதிரே வந்த பஸ்ஸுடன் மோதிவிட்டான். நீங்கள் யார் ?

விநாயக : ஐயோ ! [கீழே விழுந்து தரையில் தலையை மோதிக்கொண்டு அழுகிறார்.]

# திருட்டுக் குடி

அநியாயக் கட்சியை ஆதரிப்பவர்கள் தங்கள் செயலுக்கு விநோத மான காரணங்களைத் தேடுவது இயல்பேயாகும். மது விலக்குச் சட்டம் செய்தால் திருட்டுக் குடி ஏற்பட்டு விடுமென்பது இத்தகைய வாதங்களில் ஒன்று. இதற்குப் பதில் பலமுறை சொல்லப்பட்டிருந்தும் மது விலக்கை எதிர்ப்பவர்கள் திருப்பித் திருப்பி இதையே கூறி வருகிறார்கள். இந்த வாதத்திலுள்ள ஆபாசத்தை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் நன்கெடுத்துக் காட்டி யிருக்கிறார். அவர் சொல்வதாவது :—

"எல்லாச் சட்டங்களினாலும் இதேவித நிலைமைதான் உண்டாகி யிருக்கிறது. உலகில் சட்டங்களில்லாவிட்டால் குற்றவாளிகளே இல்லை. ஆயினும் களவு கூடாது என்னும் சட்டமுள்ள தேசத்தில் நான் வசிக்க விரும்புவேனே யன்றி, அதிகாரிகள் உடந்தையா யிருந்து களவு நடத்தும் நாட்டிற்கருகிலும் செல்லமாட்டேன். அமெரிக்காவில் ஜனங்கள் சட்ட விரோதமாகக் குடிக்கிறார்களே யென்று, பாவம், ஆஸ்திரேலியாவிலுள்ள சாராயக் கடைக்காரர்கள் கண்ணீர் விடுகிறார்கள். சட்ட விரோதமான குடி அமெரிக்காவிலும் இருக்கிறது ; மதுவிலக்குச் சட்டம் ஏற்படுத்திக் கொள்ளாத ஆஸ்திரேலியாவிலுந்தான் இருக்கிறது. ஆனால் 'சட்ட விரோதமான' என்னும் அடைமொழியைப்பற்றி எனக்குக் கவலை கிடையாது. 'குடி' என்னும் பெயர்ச்சொல்லைப் பற்றித்தான் நான் கவலை கொள்கிறேன்.

"ஏழைத் தொழிலாளி ஒருவன் தான் மெய் வருந்தி உழைத்துப் பெற்ற கூலியைச் சாராயக் கடையில் கொடுத்துவிட்டு வெறுங் கையுடன் வீட்டுக்குப் போகிறான். அவன் மனைவி கையை நீட்டும்போது அவன் 'திருட்டுச் சாராயம் விற்பவனுக்கு நான் பணத்தைக் கொடுத்து விட வில்லை. சட்டப்படி சர்க்கார் லைசென்ஸ் பெற்று விற்பவனுக்கே கொடுத்தேன்' என்று பதில் சொன்னால், அவன் மனைவி திருப்தி யடைவாளா என்று சிந்தித்துப் பாருங்கள்.

"அமெரிக்காவில் திருட்டுக் குடி இருப்பது உண்மைதான். ஆனால் திருட்டுத்தனமாய் ஒருவன் ஒரு புட்டி குடிப்பது தீமையா ; சட்ட சம்மதமாய்ப் பலர் பீப்பாய்க் கணக்கில் குடிப்பது தீமையா ? இவ்விரண்டில் எதனால் தேசத்துக்கு அதிக தீமை விளையுமென்று பாருங்கள்."

இந்தக் கேள்விக்கு அமெரிக்கா தேசம் பதில் சொல்லியே யிருக்கிறது. அமெரிக்கா மகா ஜனங்களும், இராஜ தந்திரிகளும், சமூகத் தலைவர்களும் முட்டாள்களல்ல. சட்ட சம்மதமாய்ப் பீப்பாய்க் கணக்கில்

குடிப்பதைவிடத் திருட்டுத்தனமாய் ஒரு புட்டி குடிப்பதினாலேயே அதிக தீமை யுண்டென்றால், அவர்கள் மதுவிலக்குச் சட்டத்தை உடனே ரத்து செய்திருப்பார்கள். ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரையில் இவ்வளவு தொல்லைக்குக் கூட இடங் கிடையாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் மதுபானம் பஞ்சமகாபாதகங்களில் ஒன்றாய்க் கருதப்பட்டு வரும் இந் நாட்டில், மது விலக்குச் சட்டத்தை மீறத்துணிவோர் மிகச் சிலரே இருப்பர். இவர்களை அடக்க நாட்டின் சாதாரண போலீஸ் படையே போதுமானது. இது போதாதென்றாலும், லக்ஷக் கணக்கில் ஸ்திரீகளும் புருஷர்களும் முன் வந்து, தொண்டர்களாயிருந்து, மதுவிலக்குச் சட்டத்தை நடத்திவைக்கத் துணை செய்வார்கள்.

## கடற்கரைக் கிளிஞ்சல்

எடிஸன் என்பவர் இவ்வுலகத்தில் புதிய இயந்திரங்களைக் கண்டுபிடித்தவரனைவருக்குள்ளும் மிகக் கியாதி பெற்றவர். இவர் அமெரிக்கா தேசத்தவர்; வயது 82. இந்த வயதிலும் நாளொன்றுக்கு 16 மணி நேரம் வேலைசெய்து வருகிறார். நாலு மணி நேரமே தூங்குகிறார். அவருடைய உணவு தானியவர்க்கங்களும் பாலுமே. இவர்தான் மின்சார விளக்கையும் போனகிராப் பெட்டியையும் கண்டுபிடித்தவர். டெலிபோனும் ஸினிமாவும் உலகத்தில் அதிகமாய்ப் பரவுமாறு இயந்திரங்கள் அமைத்தவரும் இவரே. மின்சார சக்தியை உபயோகித்து இவர் புதிதாய்க் கண்டுபிடித்த இயந்திரங்கள் உலகத்திற்குப் பலவகையிலும் பயன் தந்திருக்கின்றன. இவர் ஒருவர் பெயரால் 1500 புதிய கருவிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. இவர் கண்டுபிடித்த இயந்திரங்களைக் கொண்டு இப்பொழுது உலகத்தில் நடந்துவரும் தொழில்களில் 450 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் போடப்பட்டிருக்கிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இத்தகைய மேதாவி சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைத் தொட்டதேயில்லை. பூரண மது விலக்குக் கொள்கை கொண்டவர்.

* * * *

### போய் விளம்பரம்

ஆசிரியர் ஜான் ஹே என்பவர் லிவர்ப்பூல் சர்வ கலாசாலையில் மருத்துவ நூலாசிரியர் ஆவர். இங்கிலாந்திலுள்ள மார்பு நோய் நிபுணர்களில் அவர் ஒருவர். சமீபத்தில் மான்செஸ்டரில் பேசுகையில் அவர் கூறிய தாவது:—“ மதுசாரம் ஓர் உணவுப் பொருள் அன்று. அது நரம்பைக் கொல்லும் ஒரு வஸ்துவே யாகும். தொத்து நோய் தொடரா வண்ணம்

பாதுகாத்துக்கொள்ள நமது உடம்பிற்குள்ள இயற்கைச் சக்தியை அது குறைத்து விடுகிறது. மதுபானம் செய்யும் மனிதனுக்குக் கபவாத சுரம் வந்தால் அவன் பிழைத் தெழுந்திருப்பது அருமை. கபவாத சுரத்தினு லும், க்ஷயரோகத்தினுலும் சாகிறவர்கள் குடிகாரர்களுக்குள் அதிகம். முழுக் குடிகாரனுக்குத்தான் இது பொருந்தும் என்று நினைக்கக்கூடாது. மிதமாகக் குடிப்பவர்கள் கூட நோய்களை எதிர்த்து நிற்கும் சக்தியை இழந்து விடுகிருர்கள். இந்த விஷயங்களெல்லாம் ஐயமின்றி நிருபிக்கப் பட்டிருக்கின்றன. ஆயினும் மது உடம்புக்கு நல்லதென்றும், அது உணவுப் பொருள் என்றும் மது வியாபாரிகள் விளம்பரம் செய்வ தைக் கண்டு பலர் ஏமாந்து விடுகிருர்கள். பல தடவை கேட்கும் விஷ யம் பொய்யாயினும் மெய்போல் ஜனங்களுக்குத் தோன்றி விடுகிறது. எனவே, சாராயத்தைப் பற்றிய பொய்யுரைகளை அடிக்கடி கண்டிக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் குழந்தைகளும் இளைஞர் களும் பொய் விளம்பரங்களினுல் ஏமாந்து போகாமல் தடுக்க முடியும்."

* * * *

## வைத்தியர்களின் அத்தாட்சி

பிரிட்டிஷ் அரசாங்க உள் நாட்டு மந்திரி கேட்டுக்கொண்டதின் பேரில் இங்கிலாந்தின் வைத்திய ஆராய்ச்சி சபையார், மதுசாரத்தின் நன்மை தீமைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்ய விஞ்ஞானப் புலவர் எட் டுப் பேர் அடங்கிய ஒரு கமிட்டியை நியமித்தார்கள். இக் கமிட்டியாரின் முடிவுகளில் ஒன்று வருமாறு:—"மதுசாரம் மூளையை பலவீனப்படுத்து கிறது; நரம்புத் தளர்ச்சி உண்டாக்குகிறது. கொஞ்சமாக மது அருந்து பவர்களுக்குப் போதை உண்டாகாவிடினும் மனேபலவீனம் உண்டாதல் நிச்சயம். இதனுல் அவர்களுடைய வேலைத்திறமை குறைகிறது. அபாய சம்பவங்கள் நேரிடுகின்றன. கட்டுப்பாடு குலைகிறது."

* * * *

அமெரிக்காவில் இல்லினுய் மாகாணத்திலுள்ள ஒரு சங்கத்தார் பின் வரும் பிரபல வைத்தியர்களின் அபிப்பிராயங்களைச் சேகரித்துப் பிரசுரித் திருக்கிருர்கள்:—

"மது சாரம் இரத்தத்தைக் கெடுக்கிறது. இரத்தத்திலுள்ள ஜீவ அணுக்களின் வளர்ச்சியைத் தடை செய்கிறது."—வைத்திய ஆசிரியர் விர் ஷாவ், எம். டி.

"நான் சிகிச்சை செய்திருக்கும் எந்த வியாதிக்காவது, அல்லது வேறு விபத்துகளினுல் ஏற்பட்ட காயங்களுக்காவது எந்த விதமான மதுவும் அவசியமென என் அநுபவத்தில் கண்டதில்லை."—டாக்டர் நாதன் டேவிஸ், எம். டி.

"மது சாரத்தை மருந்தாக உபயோகப்படுத்துவது மிக அபாயகரமென்று நான் கருதுகிறேன்."—டாக்டர் ஜே. எச். மஸ்ஸர், எம். டி. (பிலாடெல்பியா).

"இரண்டு மனிதர்களுக்கு ஒரே விதமான நோய் வந்தால், மற்ற எல்லா நிலைமைகளும் ஒத்திருக்கும் பட்சத்தில், மீது அருந்துபவனை விட மது அருந்தாதவன் விரைவில் பிழைத்துக்கொள்வான். மது சாரம் உடம்புக்குப் போஷிப்பு அளிப்பதில்லை; உடம்பை மெலியச் செய்கிறது. அது உடம்புக்குப் பல மளிப்பதில்லை; கிளர்ச்சி கொடுத்துக் களைப்படையச் செய்கிறது. உற்சாகம் தருவதில்லை; சோர்வுறச் செய்கிறது."—டாக்டர் நார்மன் கெர் (இங்கிலாந்து.)

"மது சாரம் ஒரு விஷப் பொருள். அதனால் விளையும் தீமைகளை எங்கும் கண் கூடாகக் காணலாம்."—டாக்டர் ஜி. ஸிம்ஸ் உட் ஹெட், எம். டி.

* * * *

## குழந்தைகளைக் கேளுங்கள்

இவ்வுலகில் இது காறும் மனிதவர்க்கத்தைப் பீடித்திருக்கும் எந்தக் கொடும் பிசாசையும் விட அதிகமாய்க் குடிப்பேய் மக்களின் இரத்தத்தை உறிஞ்சி யிருக்கிறது; வேறெந்தக் கொடுமையையும் விட அது அதிக ஜனங்களை வீடு வாசலில்லாத பரதேசிகளாகச் செய்திருக்கிறது; அதிகம் பேரை வறுமைக் குழியில் வீழ்த்தி யிருக்கிறது; அதிக குழந்தைகளைக் கொன்றிருக்கிறது; அதிக குடும்பங்களைக் கெடுத்திருக்கிறது; அதிகமான கண்களைக் குருடாக்கி யிருக்கிறது; அதிகம் பேரை அங்கவீனர்களாய்ச் செய்திருக்கிறது; பைத்தியமாக்கி யிருக்கிறது; ஆண்மை குலையச் செய்திருக்கிறது; அதிகமான பெண் மக்களின் கற்புக் குலைவதற்குக் காரணமா யிருந்திருக்கிறது; அதிக ஜனங்கள் மனமுடைந்து வாழ்வு குலைந்து தற்கொலை செய்துகொள்ளக் காரணமா யிருந்திருக்கிறது; வேறெந்தக் கொள்ளை நோயையும்விட அது அதிக மரணங்களை உண்டாக்கி யிருக்கிறது.

குழந்தைகளைக் கேளுங்கள்! சின்னஞ் சிறு குழந்தைகள், கொடுமைக்காளான குழந்தைகள், நொண்டிக் குழந்தைகள், குருட்டுக் குழந்தைகள், மூடக் குழந்தைகள், தாய் தகப்பனறியாத குழந்தைகள், பட்டினி கிடக்கும் குழந்தைகள், அடித்துத் துன்புறுத்தப்படும் குழந்தைகள், மாண்டுபோன குழந்தைகள்—இவர்கள் எல்லாரையும் கேளுங்கள்! குடியின் கொடுமைக்குச் சாட்சி கூறுவார்கள்.

—எவாஞ்சலின் பூத்,
ஸால்வேஷன் சைனியத்தலைவர்.

ஆசை காட்டி மோசம் செய்வதில் மதுவுக்கு மிஞ்சியது வேறொன்று மில்லை. அது பலந்தருவதாய் ஆசை காட்டுகிறது; உண்மையில் பலவீனந்தருகிறது. வெப்பந்தருவதாய் ஆசை காட்டிப் பின்னர் குளிரைத் தருகிறது. உயிர் அளிப்பதாய்ச் சொல்லி அகால மரணத்தைக் கொடுக்கிறது. அறிவு தருவதாய் ஆசை காட்டி மூளைக் குழப்பத்தை அளிக்கிறது.

—டாக்டர் நார்மன் கெர்.

* * * *

## விஷத்தினும் கொடியது

பெயர் பெற்ற பௌதிகப் புலவரும், ஆராய்ச்சிக்காரருமான தாமஸ் ஹக்ஸ்லி என்பவரை, "மது சாரம் மூளை வேலைக்கு ஒத்தாசை செய்கிறதா?" என்று ஒரு முறை கேட்டார்கள். அதற்கு அவர் கூறிய பதிலாவது:—"என்னைப் பொறுத்தவரையில், மது அருந்துவதைக் காட்டிலும் விஷத்தைக் குடித்து விடுவேன். விஷத்தைவிட மது அபாயகரமானது என்று நான் தயங்காமல் கூறுவேன். ஏனென்றால் விஷம் மதுவைப்போல் சன்மார்க்கத் தவறுதலுக்குக் காரணமாயிருப்பதில்லை. போதை கொண்டு இழிவுற்றுப் பலநாள் துன்பப்பட்டுச் சாவதைவிட ஒரே யடியில் செத்துப்போதல் எவ்வளவோ மேலல்லவா?"

மருந்துக்காகவன்றி வேறு காரியங்களுக்காக விஷம் விற்பவர்களை உலகெங்கும் அரசாங்கத்தார் தண்டிக்கிறார்கள். ஆனால் விஷத்தினும் கொடிய மது விற்பதற்கு நமது அரசாங்கத்தார் எல்லாவகை உதவியும் செய்து கொடுத்து லாபத்திலும் பங்கு பெறுகிறார்கள்! இது விந்தையல்லவா?

* * * *

## அன்றும் இன்றும்

லண்டனிலுள்ள ஆங்கில-இந்திய மது விலக்குச் சங்கத்தின் காரியதரிசி மிஸ்டர் பிரடரிக் கிரப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"இந்திய மக்கள் ஐரோப்பியரிட மிருந்தே குடிப்பழக்கம் கற்றுக் கொண்டார்கள் என்பது மிகைப் படுத்துவதாகும். ஹிந்து சாஸ்திரங்கள் குடிப் பழக்கத்தைக் கண்டித்தபோதிலும் ஆதிகாலத்திலிருந்து இந்தியாவில் அத்தீமை இருந்து வந்த தென்பதற்குப் பல அத்தாட்சிகள் எடுத்துக் காட்டலாம். ஆனால் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி நமக்குத் தெளிவாகத் தெரியவரும் விஷயங்கள் மூன்று உண்டு. அவை யாவன:—(1) இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முந்தைய காலத்தில் ஆங்காங்குச் சிற்சில வகுப்பு ஜனங்களே குடித்துவந்தார்கள். (2) சென்ற ஐம்பது வருஷகாலத்தில் குடிப்பழக்கம் அதி வேகமாகப் பரவி வந்திருக்கிறது; குடிகாரர்களும் பெருகி வந்திருக்கிறார்கள். (3) பழைய காலத்தில் மது விற்பனை அரசாங்க ஆதரவின்றி நடந்து வந்தது. இப்பொழுது அரசாங்கத்தின் வருமானத் துறைகளில் அது முக்கியமான தொன்றாகி விட்டது."

இந்தியர்கள் ஐரோப்பியர்களிடமிருந்துதான் குடிப்பழக்கம் கற்றுக் கொள்ளவில்லையென்பது உண்மையே. ஆனால் இந்தியாவில் இதற்கு முன் குடித்தல் ஓர் இழிவான பாவமென்றே கருதப்பட்டு வந்தது. ஐரோப்பியர்களின் கூட்டுறவின் பயனாக இப்போது குடிக்கு ஓரளவு கௌரவம் ஏற்பட்டு வருகிறது.

* * * *

## மதுவிலக்குக்கு விரோதிகள் யார்?

பம்பாய் மாகாணத்தின் விவசாய இலாகா டைரக்டராயிருந்த டாக்டர் ஹரால்டுமான் என்பவர் லண்டனில் நடந்த ஆங்கிலோ இந்திய மது விலக்குச் சங்கத்தில் பின்வருமாறு பேசினர்:—

"இங்கிலாந்துடன் ஒப்பிட்டால் இந்தியாவில் குடித்தீமை குறைவேயாகும். பொதுவாகக் கூறின், கள்ளு, சாராயக் கடைகளை மூடுவதற்கு ஜனங்கள் மனப்பூர்வமாக ஆதரவளிப்பார்கள். குடிப்பழக்க முள்ளவர்களும் அதற்குச் சாதகமாகவே இருப்பார்கள். தேசத்தின் அரசியல் தலைவர்களும் பொதுவாக மது விலக்கை ஆதரிக்கின்றனர். உண்மையில், அரசாங்க அதிகாரிகளைத் தவிர்த்து, கள்ளு, சாராயக் கடைகளை மூடக்கூடாதென்று சொல்பவர் அநேகமாக இல்லை. அப்படி யாரேனும் சொன்னாலும் அரசாங்க வருவாயைப் பற்றிய காரணங்களுக்காகவே சொல்வார்கள். குடிப்பழக்கமுள்ள வகுப்பாருக்குக் குடிப்பதற்கு வசதிகள் அளிக்க வேண்டுமென்று சொல்வது சுத்தமாய்ப் பொருளற்றது. ஏனென்றால், குடிப்பவர்களில் மிகப் பெரும்பான்மையோர் அந்த வசதிகள் வேண்டா மென்கிறார்கள்."

குடிப்பவர்களுக்குக் குடியின் தீமைகளை எடுத்துச் சொல்லும் பிரசாரம் அவசியமில்லை யென்று டாக்டர் மான் கூறுவதிலிருந்து நன்கு வெளியாகின்றது. குடிகாரர்கள் குடியின் தீமைகளை ஏற்கனவே நன்குணர்ந்திருக்கிறார்கள். பிரசாரம் சட்டசபை அங்கத்தினர், மந்திரிமார், பெரிய அதிகாரிகள் முதலியோரிடையேதான் முக்கியமாகச் செய்யப்படவேண்டும். இவர்களைக் கட்டாயப்படுத்தி மது விலக்குச் சட்டம் இயற்றும்படி செய்யும் சக்திவாய்ந்த வாக்காளரிடையிலும் அப்பிரசாரம் செய்யவேண்டும்.

* * * *

## தொழிற் கட்சி மந்திரிகள்

தற்போது பிரிட்டிஷ் இராஜ்யத்தை ஆட்சிபுரியும் தொழிற் கட்சி மந்திரிகளில் பலர் மதுபானத்தின் தீமைகளை நன்குணர்ந்தவர்களென்று தெரிகிறது. பொக்கிஷ மந்திரி மிஸ்டர் பிலிப் ஸ்நோடன் பின்வருமாறு சொல்லி யிருக்கிறார்:

"மது வியாபாரம் செல்வத்தை அழித்து வறுமை, கொலை, களவு, குற்றங்கள், நோய், பைத்தியம், மரணம் ஆதியவற்றை உண்டுபண்ணுகிறது. தற்போது மது வியாபாரத்தில் ஈடுபட்டிருப்போர் அனைவருக்கும் அரசாங்கம் பொக்கிஷத்திலிருந்து உபகார சம்பளம் கொடுத்து அவர்களைச் சும்மா யிருக்கும்படி செய்தால் தேசத்துக்கு அளவற்ற நன்மை உண்டாகும்."

முதன் மந்திரி மிஸ்டர் ராம்ஸே மக்டனல்ட் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:

"பிரதி வருஷமும் நாம் ஏராளமான பணம் குடிக்காகச் செலவு செய்து வருகிறோம். இந்தப் பணத்தை நாம் எப்படியாவது செலவழிக்கத்தான் போகிறோமென்றால், நமது மனைவி மக்களுக்குப் புதிய உடைகள் வாங்குவதிலும், தரையில் விரிக்க ஜமுக்காளங்களும், வீட்டை அலங்கரிக்கப் படங்கள் வாங்குவதிலும், விடுமுறை நாட்களில் நாட்டுப்புறங்களுக்குச் சென்று ஆண்டவன் அளித்த தூய காற்றை சுவாசிப்பதிலும் அதைச் செலவழித்தால் எவ்வளவோ மடங்கு நன்மையா யிருக்குமல்லவா? பணத்தைத் தாராளமாய்ச் செலவு செய்யுங்கள்; நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அதை அறிவுடைய வழிகளில் செலவழியுங்கள்."

அயல் நாட்டு மந்திரி ஆர்தர் ஹெண்டர்ஸனின் அபிப்பிராயம் வருமாறு:

"பொருளாதாரத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும் சரி, தொழிலாளிகளின் கதிமோட்சத்துக்கு முக்கிய தடையாயிருப்பது குடியைப்போல் வேறொன்றுமில்லை."

இப் புதிய மந்திரிகள் தாங்கள் அதிகாரத்துக்கு வந்ததும் செய்த முதல் காரியங்களில் ஒன்று, ஆங்கில நாட்டில் மதுபானத் தீமையைப்பற்றி விசாரணை செய்ய ஒரு கமிஷனை நியமித்ததாகும். ஆனால் இவர்களுடைய மதுவிலக்குக் கொள்கை 6000 மைல் தாண்டி பாரத தேசம் வரையில் வந்து எட்டும்படி அவ்வளவு தீவிரமானதா என்பது இனித்தான் தெரியவேண்டும்.

* * * *

மார்லி பிரபு ஆங்கில தேசத்தில் புகழ்பெற்ற புலவர்; சில காலம் இந்தியா மந்திரியாயிருந்து பெயர் பெற்றவர். அவர் ஒரு சமயம் மதுபானத்தைப்பற்றிப் பேசுங்காலத்தில் சொன்னதாவது:—"உயிரைக் கொல்லும் புதியதொரு கொள்ளை நோய் இந்தியாவைப் பீடிக்க ஆரம்பித்திருக்கிறது; அதுதான் மதுபானம்."